Registered as a news paper.

இலவசப் பிரதி

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 13 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 23 (27.03.2003) வியாழக்கிழமை இதழ் :175

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து

SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

சீமேந்து

(சி-653)

## ட்ரோலர் மூழ்கடித்தது யார்? ஆதாரங்கள் எதுவுமில்லை!

### எரிக் சொல்ஹெய்ம் அறிவிப்பு

சீன மீன்பிடி ட்ரோலர் மீதான தாக்குதலை யார் நடத்தினர் என்பது குறித்து பூரண ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை என நோர்வேத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

ஒஸ்லோவில் இராஜதந்திரிகள் மத்தியில் சொல்ஹெய்ம் பேசும்போது, விடுதலைப்புலிகள் தற்போது இராணுவக் கட்டமைப்பிலிருந்து அரசியல் வழிமுறைக்கு மாறிவரும் கட்டத்தில் இருக்கின்றனர். சில ஸ்கன்டிநேவிய நாடுகளின் சுயாட்சித் திட்டங்களை ஆராயும் பொருட்டு, புலிகளின் 21 பேர்கொண்ட குழுவொன்று இந்நாடுகளுக்கு வரவுள்ளது என்றார்.

### உயர்தரப் பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில்

## தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் 346 பேருக்கு நியமனக் கடிதம்

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு தமிழ் மொழிமூல ஆசிரியர்களாக 346 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் புள்ளி அடிப்படையில், தமிழ்மொழி ஆசிரியர்களாக நியமிப்பதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தெரிவுசெய்யப்பட்டவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 57 பேரின் பெயர் விபரங்கள் வருமாறு,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குடாரப்பு தரையிறக்க வெற்றிவிழா மூத்த தளபதிகள் பங்கேற்றனர்

### நினைவுக்கல்லை பால்ராஜ் திறந்துவைத்தார்

**(வடமராட்சி கிழக்கிலிருந்து லிவிங்ஸ்டன்)**

**குடாரப்பு தரையிறக்கத்தின் மூன்றாவது ஆண்டு வெற்றிவிழாவும், நினைவுக்கல் திறப்பு விழாவும் நேற்று வடமராட்சி கிழக்கு குடாரப்பில் நடைபெற்றது.**

நேற்றுமாலை 5 மணிக்கு வடமராட்சி கிழக்கு, புனரமைப்புக் குழுத் தலைவர் சி.பொன்னம்பலம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

முதன்மைச் சுடரினை சோதியா படையணியின் சிறப்புத்தளபதி கேணல் துர்க்கா ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை ஏற்றிவைத்தார். குடாரப்பு தரையிறக்க நினைவுக்கல்லினை கேணல் பால்ராஜ் திரைநீக்கம் செய்துவைத்தார்.

குடாரப்பு தரையிறக்கத்தின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 13 மாவீரர்களினதும் திருவுருவப்படங்களிற்கும் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், மூத்த தளபதி பொட்டம்மான்,மாலதி படையணியின் சிறப்புத்தளபதி கேணல் விதுஷா, கேணல் கடாபி, செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனி, இம்ரான் பாண்டியன் படையணியின் தளபதி மணியரசன், மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் ரேகா, வடமுனைக கட்டளைத் தளபதி கேணல் தீபன், கிட்டு படையணிச் சிறப்புத் தளபதி கேணல் பானு, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைத்தளபதி லெப்.கேணல் நகுலன், கேணல் ஜெயம், தளபதி தினேஸ் மாஸ்ரர் ஆகியோர் ஈகச் சுடரினை ஏற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் தளபதிகள், போராளிகள், பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா, கேணல் பால்ராஜ், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஆகியோர் உரையாற்றினர்.

## கடற்போரினை தவிர்த்தல் குறித்து கடற்படை அதிகாரிகளுடன் பேச்சு

### கண்காணிப்புக் குழு நடாத்தியது

(கொழும்பு)

போர் நிறுத்த உடன்படிக்கைக்கு அச்சுறுத்தலாக விளங்கும் கடற்போர்களை எதிர்காலத்தில் எவ்வாறு தவிர்க்கலாம் என்பது குறித்து கண்காணிப்புக்குழுவினருக்கும் கடற்படை அதிகாரிகளுக்கும் இடையில் நேற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றன.

கடலில் போரைத் தவிர்க்க எத்தகைய வழிமுறைகளைக் கையாளலாம் என்பது குறித்துப் பேச்சு நடத்தியதாக கண்காணிப்புக் குழுவின் பிரதித்தலைவர் ஹவ்ரப் ஹொக்லண்ட் தெரிவித்தார்.




ஆழ்கடல் அலைமோதும் கடற்கரையில் அமைக்கப்பட்ட குடாரப்புத் தரையிறக்கத்துக்கான நினைவுக்கல்.



குடாரப்பு நிகழ்வில் பங்கேற்ற தளபதிகளில் கேணல் பானு, கேணல் பால்ராஜ், கேணல் சூசை ஆகியோரைப் படத்தில் காணலாம்.

## தலைவரின் நுட்ப திட்டமிடலே குடாரப்பு தரையிறக்கமாகும்

### கேணல் பால்ராஜ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தேசியத் தலைவரின் மதிநுட்பமான திட்டமிடலின் வெளிப்பாடாகவே குடாரப்பு தரையிறக்கம் அமைந்தது என கேணல் பால்ராஜ் தெரிவித்தார்.

ஆனையிறவை வெற்றிகொள்ள குடாரப்புப் பகுதியில் விடுதலைப் புலிகள் கடல் வழி மூலமாக வந்து தரையிறங்கியதன் மூன்றாம் ஆண்டு நிறைவாக, தரையிறக்கம் இடம்பெற்ற இடத்தில் நினைவுக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



ஈராக் எரியுதெண்டு பார்த்தால், இனி பெற்றோல் விலை கேக்கவும் எரியும்போல கிடக்கு...!

## மண்ணைக் காத்ததுபோலவே கட்டியெழுப்பவும் வாருங்கள்

### மக்களுக்கு கேணல் சூசை அழைப்பு



மக்களின் ஆதரவு இருந்தமையினால் குடாரப்பில் நாம் வெற்றிகரமாகத் தரையிறக்கத்தை மேற்கொண்டோம் என, கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை தெரிவித்தார்.

குடாரப்பு நினைவுக்கல் திரைநீக்க நிகழ்வில் நேற்றுக் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - மக்கள், எல்லைப் படையாக, கிராமியப் படையாகச் செய்த அர்ப்பணிப்புக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### பெற்றோல் விலை நள்ளிரவு முதல் உயர்ந்தது

பெற்றோலின் விலை நேற்று நள்ளிரவு முதல் இரண்டு ரூபாவினால்அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

எனினும், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகளில் எந்தவித அதிகரிப்பும் செய்யப்படவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

021 - 2223916, 0777 - 517019

(சி-626) 01-505632, 074-612656, 01-390128

# பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்கு மனித உரிமை அதிகாரி நேரில் விஜயம்

மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அதிகாரி, நேற்று உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்குச் சென்று நிலைமைகளை நேரில் அவதானித்தார்.

தமது இடங்களில் மீளக் குடியமர அனுமதி மறுக்கப்படுவதாக, யாழ். மனித உரிமை அலுவலகத்திற்கு கிடைத்த 372 முறைப்பாடுகளை அடுத்தே, இவர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களை நேரில் சென்று பார்வையிட்டார். அங்கு படையதிகாரிகளுடனும் அவர் கலந்துரையாடினார்.

எனினும், இப்பகுதியின் பாதுகாப்புக் காரணங்களால் பொது மக்கள் எவரையும் குடியமர்த்த முடியாது எனப் படையதிகாரிகள் இவரிடம் தெரிவித்தனர்.

பாதுகாப்பு வலயம் தொடர்பான சரியான விபரங்களைப் பெற்றுக் கொண்ட பின்னர், பொதுமக்கள் இருப்பிடங்களை அத்துமீறி கைப்பற்றிவைத்திருப்பது தொடர்பாக, மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்ய ஆலோசித்திருப்பதாக மனித உரிமை ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (சு)

# கிழக்குப் பல்கலைக்கழக வேந்தராக பேராசிரியர் மூக்கையா நியமனம்

கிழக்குப் பல்கலைக்கழக வேந்தராகப் பேராசிரியர் மூக்கையா, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை இப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக இவர் கடமையாற்றி வந்தார்.

இதுவரை காலமும் துணை வேந்தரே கிழக்குப் பல்கலைக் கழகத்தின் முதல்வராகச் செயற்பட வேண்டியிருந்தது. வேந்தர் ஒருவரை நியமிக்க ஜனாதிபதி சந்திரிகா தாமதம் காட்டியதால், துணை வேந்தரே முதல்வராகவும் இருந்து வந்தார்.

இந்த நிலையில்தான், துணை வேந்தர் மூக்கையாவை வேந்தராக ஜனாதிபதி நியமித்துள்ளார். ஜனவரி 16 ஆம் திகதி முதல் இவரது பதவிக்காலம் மூன்று வருடங்களுக்குச் செல்லுபடியாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 34 பாடசாலைகளுக்கு நெதர்லாந்து 10 மில். உதவி

(யாழ்ப்பாணம்)

நிக்கொட் அமைப்பினூடாகக் குடாநாட்டிலுள்ள 34 பாடசாலைகளுக்கு 10.15 மில்லியன் ரூபாய் நிதி இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, யாழ்.கல்வி வலயத்தின் பத்தொன்பது பாடசாலைகளுக்கு மூன்று மில்லியன் ரூபாவும், வலிகாமம் கல்வி வலயத்தின் நான்கு பாடசாலைகளுக்கு 3.41 மில்லியன் ரூபாவும், தீவக கல்வி வலயத்தின் பதினொரு பாடசாலைகளுக்கு 3.5 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதியினை நெதர்லாந்து அரசு வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

(ரா,சு)






இலங்கையின் முதல்தர கூரை ஓடு.
யாழ்ப்பாணத்திலும் அறிமுகமாகிறது. நிறை- 2.5 Kg

✳ Araliya Stores, No - 11, Negombo Road, Dankotuwa
T.P: 031 - 58174

✳ Rupika Tiles Factory, Udangawa, Kochchikade
T.P: 031 - 77346

✳ No.6, Hindu Ladies Lane, Kanthartmadam, Jaffna
T.P: 021 - 2223268

சிறந்த தரத்திற்கு உத்தரவாதம்


## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்
## ஆதனவரி அறிவித்தல் - 2003

2003ம் முதலாம் கந்தாயத்துக்கான ஆதனவரியை 31.03.2003ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமும் இன்றி இவ்வலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ் விவரப்படி வெலியாற்றுப் பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

| | |
|---|---|
| வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் | 15% |
| ஏனைய காணிகள் | 20% |

நிலுவை உட்பட 2003ம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் மாநகரசபையின் கட்டளைச்சட்டம், அத்தியாயம் 252, பிரிவு 252ன் படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

காசோலையாக செலுத்துவோர் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
17.03.2003

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி/715)

# நிதர்சனத்தின் திரைப்படங்களை தென்பகுதிக்கு எடுத்துச்செல்வேன்

## சினி யாத்ராவில் இயக்குநர் பிரசன்ன விதானகே

(யாழ்ப்பாணம்)

பாதை திறப்பின் பின்னர் யாழ்ப்பாணம் நோக்கி ஷொப்பிங் பாக் முதல் பிளாஸ்ரிக் கதிரைவரை எடுத்து வரப்பட்டுள்ளன. இதே போன்று இந்தச் சினிமாவினையும் வட-கிழக்குப் பகுதிக்கு நான் கொண்டு வரவில்லை. கலைஞர்கள் மத்தியில் ஓர் ஐக்கியத்தை வளர்க்கவும், அதன் மூலம் ஓர் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவுமே நான் யாழ்ப்பாணம் வந்துள்ளேன் - இவ்வாறு நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற, சினி யாத்ரா திரைப்பட விழாவில் உரையாற்றும் போது பிரபல சிங்கள திரைப்பட இயக்குநர் பிரசன்ன விதானகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- யாழ். குடாநாடு யுத்தத்தினால் சூழப்பட்டிருந்த வேளையிலும், நிதர்சன நிறுவனம் பல சிறந்த திரைப்படங்களைத் தயாரித்திருந்ததாக அறிகின்றேன். அவற்றினை நான் தெற்குப் பகுதிக்கு கொண்டு சென்று திரையிடுவதற்கு ஆவலாய் இருக்கிறேன் என்றும் தெரிவித்தார்.

மற்றொரு சிங்கள திரைப்பட இயக்குநரான தர்மசிறி பண்டாரநாயக்க கருத்து வெளியிடுகையில்- தேர்தல் காலங்களில் வாக்குப் பெற வரும் அரசியல்வாதியாக, அரசியல் வளர்ப்பதற்கு நான் இங்கு வரவில்லை. நீண்டகாலமாகத் தொடரும் யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டுவந்து, அவற்றின் மூலமாக சமாதானத்தை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க எம்மால் என்ன செய்ய முடியும் என்று ஆராய்வதற்காகவே நான் வடக்குக்கு வந்துள்ளேன் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில், முன்னாள் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, துணைவேந்தர் மோகனதாஸ், பேராயர் ஜெபநேசன் மற்றும் மதகுருமார், நாடக நெறியாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பொதுமக்கள் எனப் பல நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர். (சு)

# சின்னஞ்சிறு செய்திகள்

### வீட்டு வளவினுள் 3 மிதிவெடிகள் மீட்பு

சாவகச்சேரி, சங்கத்தானை மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள ஓர் வீட்டு வளவினைத் துப்புரவு செய்தபோது, அவ்வளவில் மூன்று மிதிவெடிகள் கண்டுபிடிக்கப்பட்டன. (25)

### தடகளப் போட்டி

நாரந்தனை றோ.க. மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி, நாளை வெள்ளி பிற்பகல் 1.30 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

### தென்மராட்சி மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி கல்வித் திணைக்கள மெய்வல்லுநர் போட்டி, நாளை வெள்ளி கொடிகாமம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் பிற்பகல் 1.30 மணிக்கு கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறும்.

### உழவியந்திரம் தடம் புரண்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர்ப்பகுதியில் பொலிஸாரின் உழவு இயந்திரம் தடம்புரண்டதில் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுக்காலை யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் நடைபெற்ற இச்சம்பவத்தில், காலியைச் சேந்த குணரட்ண பிரசாந் வயது 29 என்ற பொலிஸாரே, தலையில் பலத்த காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ச)


நிறஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00(பு.நே.)
சரத்குமார், மீனா, வடிவேல் நடித்த
மாயி
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி
HOLLOW MAN
(சி-627)

ராஜா யாழ்ப்பாணம்.

விஜய், ரீமாசென், வடிவேல் நடித்த

பகவதி
10.30, 2.30, 6.30 மட்டும்.
(சி-628)


# ஜன்னலை உடைத்து திருடர்கள் 35 பவுண் நகைகளை திருடினர்

## நல்லூர் குறுக்கு வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் மூன்றரை இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய 35 பவுண் நகைகள் திருடர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளது.

நல்லூர் குறுக்கு வீதிப்பகுதியில் வீட்டுரிமையாளர் ஆழ்ந்து உறங்கிய சமயம், வீட்டின் ஜன்னலினூடாக உலக்கையை நுழைத்து யன்னலை உடைத்து உட்புகுந்த திருடர்களே நகைகளைத் திருடினர்.

வீட்டிலிருந்த ஐந்து சூட்கேசுகளை வெளியே எடுத்துச் சென்று ஆராய்ந்து, ஒரு சூட்கேசிலிருந்த நகைகளை மட்டும் திருடிச் சென்றனர்.

காலையில்தான் தமது வீட்டில் பொருட்கள் திருட்டுப் போயிருப்பது தெரியவந்ததாக வீட்டுரிமையாளர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இதே வேளை சம்பவதினமன்று மாலை சந்தேகத்துக்கிடமான முறையில் "ஓட்டோ" ஒன்று நின்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு அண்மைக்காலமாக இப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (சு)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## வெளிவாரிப் பரீட்சைகள்

1. வணிகமாணி பகுதி - 11 - 2001
2. வணிகமாணி பகுதி - 111 - 2001

மேற்படி பரீட்சைகள் 17.04.2003 தொடக்கம் 22.05.2003 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் ஒழுங்கில் நடைபெறவுள்ளது.

1. வணிகமாணி பகுதி-11 -2001 17.04.2003 தொடக்கம் 24.04.2003 வரை
2. வணிகமாண்ி பகுதி-111 -2001 12.05.2003 தொடக்கம் 22.05.2003 வரை

நேர அட்டவணையையும் பரீட்சை அனுமதி அட்டையையும் 08.04.2003 தொடக்கம் யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
27.03.2003

(சி/716)

# இன்றைய நாள் இனிய நாள்

## 27-03-2003 - வியாழக்கிழமை

| | |
|---|---|
| மேடம் | :- வயிற்றில்ரோகம், பணவரவு, நன்மதிப்பு, காரியசித்தி, மனப்பயம். |
| இடபம் | :- பயனற்ற பிரயாசம், புத்திரரால் கவலை, பொருள்வரவு, நற்கீர்த்தி. |
| மிதுனம் | :- தனதானிய நிறைவு, மனமகிழ்ச்சி, தொழிற்சிறப்பு, பெரியோர் மதிப்பு. |
| கர்க்கடகம் | :- சோம்பல், சத்துருபீடை, வாக்குக்கலகம், குடும்பசுகக் குறைவு. |
| சிங்கம் | :- தனவிருத்தி, சிநேக இலாபம், களஸ்திர புத்திர மகிழ்ச்சி, புதிய ஸ்தானம். |
| கன்னி | :- பயனற்ற பிரயாசம், தனதானிய இலாபம், பிரயாசை மிகுதி, அதிகாரம். |

பிரபல சோதிடர்
எஸ்.குகநேசன்

| | |
|---|---|
| துலாம் | :- கெட்ட செயல்கள், வயிற்றுவலி, புத்திக்குறைவு, தன இலாபமின்மை, காரியவிக்கினம். |
| விருச்சிகம் | :- வாக்குவசீகரம், பொருட்பேறு, மனமகிழ்ச்சி, பூமி இலாபம், ஆரோக்கியம். |
| தனு | :- சத்துருபீடை, தொழில் மூலமான நன்மைகள், காலில் காயம், சிநேகிதரால் கஷ்டம். |
| மகரம் | :- வாகனசுகம், காரியவிக்கினம், பிரயாணக் கஷ்டம், புத்திரரால் கவலை. |
| கும்பம் | :- தாழ்ந்த நிலை, விஷபயம், வீண் மனஸ்தாபம், மனக் கவலை, அஜீரணம். |
| மீனம் | :- காரியசித்தி, வீண்பயம், குடும்ப மனஸ்தாபம், தனலாபம், சிநேக இலாபம். |

# கண்காணிப்புக் குழுவுக்கு கூடுதல் அதிகாரம்

# திட்டவரைபு அடுத்த வாரம் கையளிக்கப்படும்

## கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் - அரச படையினருக்கும் இடையிலான மோதல்கள், பிரசசினைகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான புதிய திட்டங்களை, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அடுத்தவாரம் இரு தரப்புக்கும் அனுப்பி வைக்கவுள்ளதாகக் கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

கண்காணிப்புக்குழுவினால் தயாரிக்கப்பட்டுவரும் புதிய நடைமுறைகள் குறித்த திட்டவரைபுகளில் - கடலிலும், தரையிலும் கைதாகும் புலிகள் மற்றும் படையினரை உடனடியாகவே கண்காணிப்புக்குழுவிடம் ஒப்படைக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், கடற்போக்குவரத்து உள்ளிட்ட பல முக்கிய பிரச்சினைகள் இந்தத் திட்டவரைபில் உள்ளடக்கப்படும் என்பதுடன், அடுத்தவாரம் புலிகளுக்கும், அரசுக்கும் இதன் பிரதிகள் வழங்கப்பட்டு அவர்களின் ஒப்புதல் பெறப்படும்.

கிழக்குக் கடற்பரப்பில் புலிகளின் வணிகக்கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தையடுத்து, எழுந்த நெருக்கடியைத் தொடர்ந்து ஹெக்கோனில் நடைபெற்ற பேச்சுக்களில்- கண்காணிப்புக் குழுவுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குவதற்கு முடிவுசெய்யப்பட்டது.

இதனடிப்படையிலேயே கண்காணிப்புக்குழுவுக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்குவதற்கு வழி செய்யும் திட்டவரைபுகள் தயாரிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## குவைத் விமானசேவை மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

ஈராக் மீதான அமெரிக்க- பிரித்தானியப் படைகளின் தாக்குதல்களை அடுத்து - வளைகுடாவில் ஏற்பட்ட பதற்றநிலையால் இடைநிறுத்தப்பட்ட குவைத்துக்கான எயர் லங்கா விமானசேவைகள் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

## வாகன கணக்கெடுப்பு

(யாழ்ப்பாணம்)

பச்சிளைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அனைத்து பதிவு செய்யப்பட்ட, பதிவு செய்யப்படாத வாகனங்கள் பற்றிய கணக்கெடுப்பு நாளை வெள்ளிக்கிழமை பச்சிலைப்பள்ளிப் பிரதேசசெயலகத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து வாகன உரிமையாளர்களும் அன்றையதினம் சகல ஆவணங்களுடன் பிரதேச செயலகத்தில் பதிவை மேற்கொள்ளுமாறு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

# சீன ட்ரோலர் விவகாரம் புலிகள் அறிக்கை சமர்ப்பிப்பு

## கடற்புலிகளின் தளபதி அனுப்பினார்

(கொழும்பு)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சனநாட்டு மீன்பிடி ட்ரோலர் ஒன்று மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான தமது அறிக்கையை விடுதலைப்புலிகள் - இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பி வைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

கடற்புலிகளின் தளபதியான செழியன் அனுப்பிவைத்துள்ள நீண்ட அறிக்கையில் - சீன மீன்பிடி ட்ரோலர் மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்துக்கும் தமக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை - இலங்கைக் கடற்படையிடமிருந்து இச்சம்பவம் தொடர்பான அறிக்கை ஒன்றைத் தாம் கோரியிருப்பதாகவும், அது விரைவில் கிடைத்துவிடும் என்றும், அதன் பின்னரே தமது அறிக்கை வெளியிடப்படும் என்றும் கண்காணிப்புக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - மேற்படி சீன மீன்பிடி ட்ரோலர் மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்துக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# தனியான பொலிஸ்படை அமைக்கிறார் பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர்!

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் பிரதி அமைச்சருமான மேர்வின் டி சில்வா - தனது சொந்தத் தொகுதியான திஸ்ஸ மகராமவில் தனியான பொலிஸ்படை ஒன்று அமைத்துள்ளார்.

'ஹெல தரண' (சிங்கள நிலம்) என்ற பெயரில் அமைக்கப்பட்டிருக்கும் இந்தப் பொலிஸ் படை அமைப்புக் கூட்டத்தில் சுமார் நூறுபேர் பங்குபற்றினர்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய மேர்வின் டி சில்வா- தான் தனியான பொலிஸ் படையை அமைப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை என்றும், வடபகுதியில் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தனியான பொலிஸ் கட்டமைப்பை உருவாக்கி வைத்திருக்கும்போது, தான் மட்டும் ஏன் தனியான பொலிஸ்படையை அமைத்து, மக்களுக்குச் சேவை செய்யக்கூடாது என்றும் கேள்வி எழுப்பினார்.

தனது தனியான பொலிஸ் படைக்கு விரைவில் ஆட்சேர்ப்புச் செய்யவுள்ளதாகவும், தெற்கின் பிரபல மன்னன் துட்டகெமுனு, அரசி விகாரமாதேவி ஆகியோரின் வழியில் தாம் செயற்படப்போவதாகவும் தெரிவித்த மேர்வின் டி சில்வா -

சிங்களவர்கள் ஒருபோதும் முன்வைத்த காலைப் பின்வைக்கக்கூடாது என்றும் குறிப்பிட்டார்.





யாழ். மாநகரசபைக்குச் சொந்தமான காணிகளில் படைத்தளம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள படையினரின் புல்டோசர் வாகனங்கள் துப்பரவுப் பணியில் ஈடுபட்டிருப்பதைப் படங்களில் காணலாம்.

படங்கள்: லிவிங்ஸ்டன்

# 'சினி யாத்ரா' திரைப்பட விழா பார்வைக்கு வரும் படங்கள்

வசந்த ஒபேசேகராவின் திரைப்படமான 'தீர்த்த யாத்திரை' அவரது முன்னைய திரைப்படங்களிலிருந்து அதன் கதை ரீதியாகவும், கருப்பொருள் ரீதியாகவும் வேறுபட்டுச் செல்கிறது எனலாம்.



வசந்த ஒபேசேகர

உண்மையான வாழ்க்கை நிகழ்வுகளிலிருந்து அருட்டுணர்வு பெற்று எழுதப்பட்ட இவ்விவரணைகள் கொண்டாடப்படுதற்குரிய காரணம்- அவை வெளிப்படுத்தும் ஆற்றல்,

## தீர்த்த யாத்ரா

இன்னும் குற்றம் புரியும் உணர்வு நிலைகள், அவற்றின் உளவியல், சமூக, அரசியல் ஆகியவை உள்ளடங்கியவற்றின் நாடகமயப்படுத்தலே. தொழில்நுட்பரீதியாக ஒபேசேகரா, பன்முக அடுக்குமுறையென்று அவரால் கூறப்படும் முறையைப் பாவித்து - இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பவை ஒன்றோடொன்று இணைத்துள்ளார்.

படிமங்களையும், ஒலியமைப்பு முறைகளையும் ஆக்கரீதியாக அருகருகே வைத்து - நேரடியான, தெளிவான கதைசொல்லல் அல்ல என்னுடையது என்பதை தெளிவாக்கியுள்ளார். இந்தவகையில் வழமையான இலங்கைப் படத்தயாரிப்பாளர் மத்தியிலிருந்து வரும் ஒரேயொரு பரிசோதனைக்குரிய நெறியாளர் இவரே.

துண்டு துண்டாகக் கதைகள் சொலலப்படும் முறையை ஜனரஞ்சக வாசகர்கள் சந்திக்கும்போது, அதில் வரும் காட்சிகள் தர்க்க முரண்பாடுடையவையாக அவர்களுக்குத் தெரியும். இதனால் குழப்பம் விளையலாம். உண்மையைச் சொல்வதனால்- இதற்கு நேர்மாறானதே நடந்திருக்கிறது. திரைக்கதை எழுதுவதில் திறமை மிக்கவரான ஒபேசேகரா- தனது பல்வகை அடுக்கு உத்தி முறையைப் பாவித்த தன்மையானது, சிக்கலை அவிழ்க்கும் விடுகதை போல் செய்யப்பட்டுள்ளதால், நேயர்கள் கதையை இனங்கண்டு கொள்வது சாத்தியமாகிறது. இதனால் வர்த்தகரீதியாகவும், உயர்தர ரசனை ரீதியாகவும் வெற்றிபெறுகிறது.

இன்னும் உணர்ச்சிமிக்க, உண்மைக்குப் புறம்பான நாடகபாணித் திகில்கதைகள் எழுதுபவர் ஒபேசேகரா என்று எடுத்துக்கொள்வது தவறு. ஜனரஞ்சக் கூறுகள் அவருடைய கதைகளில் இருந்தபோதும், சிக்கலான - வழமைக்குமாறான உறவுமுறைகளை ஆய்வு செய்வதாக அவை இருக்கும். இந்த அவலத்திலிருநது மீள்வதற்கான வழியாக வன்முறை, கொலை, மரணம் ஆகியவையே உள்ளன.

வசந்த ஒபேசேகராவின் புதிய படத்தில், அவரது படங்களுக்குரியவையாகச் சொல்லப்படும் எவையும் இல்லை. இதில் வன்முறை இல்லை. உடல் ரீதியான செயற்பாடு, சாவு இல்லை.

ஆனால், வன்முறை என்பது இனனொருவகையாக உள்ளது. கதாநாயகிக்கு ஏற்படும் மன அழுத்தம், சாவு என்பதுகூட உடல் ரீதியானது அல்ல. அது உணர்வுபூர்வமானது. ஒரு மத்தியதர வர்க்கச் செல்வந்தக் குடும்பத்தின் ஒரேஒரு பிள்ளையாக வளர்க்கப்பட்ட ஒரு இளம் பெண், திடீரெனத் தான் தத்தெடுத்து வளர்க்கப்பட்ட பிள்ளையென்பதை அறிகிறாள். அவளுடைய முன்னைய தந்தை, தாய், அவளுக்கு வரப்போகும் கணவன், அவளுடைய நண்பர்கள் ஆகியோரோடு இருந்த உறவுமுறை சிதறிப்போகிறது. அவள் மேல் கொட்டப்பட்ட எல்லாவிதமான அர்ப்பணம், அன்பு யாவும் வீணாய்ப் போகின்றன. இப்போ கசப்பும், பகைமையும் உறவுமுறைக்குள் நுழைகின்றன. இவற்றில் மிகத் தீவிரமானது - அவளை மணக்க இருப்பவன் எடுக்கும் நிலைப்பாடு. அதாவது, அவளுடைய சமூக அந்தஸ்து இப்போ, சமூக வாழ்க்கையில் வெற்றிபெற்ற மேல்தட்டு மத்தியதர வர்க்கச் சட்டத்தரணியின் கௌரவத்துக்குரிய மகளல்ல. அவள் யார்? அவள் யாராக இருக்கமுடியும்? ஒரு நாடோடியின் மகளாகத் தள்ளிவைக்கப்பட்ட சாதியிலிருந்து வருபவளாக இருக்கலாம். இத்திரைப்படம் அவளது உண்மையான தாய், தந்தையரைத் தேடிக் கண்டுபிடிக்கும் பயணத்தினது இறுதியில் - தனது அடையாளத்தைக் கண்டு பிடிப்பதிலும் ஆவணமாக உள்ளது. ஒபேசேகரா அவளது பூர்வீகம் பற்றிய தேடலில், தனது பன்முக அடுக்கு உத்திமுறைகளான முன்னுக்குபோகும் (Flash Forwards) பின்னுக்கு நகரும் காட்சிகள் (Flash Backs) அதிகற்பனாக்கட்சிகள் ஆகிய எவற்றையும் கைவிடவில்லை. இறுதிக் காட்சி வரும்வரை எல்லாவற்றையும் இறுக்கி வைத்திருக்கிறார். அவளுடைய இரட்டைச் சகோதரியை இறுதியில் எதிர்கொள்ளுதல் எல்லாம் சேர்ந்து வெறும் கற்பனாவாத மாயைகளை அழித்துவிடுகிறது. உண்மை வெளிப்பட, துன்பமயப்பட்ட தேடுதல் முடிவுறுகிறது. ☆

# போகம்பரைச் சிறையில் தூக்குமேடை புனரமைப்பு

(கண்டி)

கண்டி - போகம்பரைச் சிறைச்சாலையிலுள்ள தூக்கு மேடையைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கையில் மீண்டும் மரணதண்டனை முறையைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துவரும் நிலையிலேயே, போகம்பரைச் சிறைச்சாலையிலுள்ள தூக்குமேடையைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

நேற்று முன்தினம் மூன்று நீதிபதிகள் தூக்குமேடை புனரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டனர். போகம்பரைச் சிறைச்சாலையில் மூன்று தூக்குமரங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## பரீட்சை முடிவுகள் அடுத்த மாதமே

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த மாதம் முதல்வாரத்திலேயே வெளியாகும் என்று பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# எரிபொருள் தட்டுப்பாட்டால் கடற்தொழிலாளர் பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

ஈராக் மீது அமெரிக்கா தொடுத்துள்ள யுத்தத்தை அடுத்து, குடா நாட்டில் நிலவிவரும் எரிபொருள் பற்றாக்குறையினால் மீனவர்கள் தொழிலில் ஈடுபடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஈராக் மீது அமெரிக்கா தாக்குதலை ஆரம்பித்ததை அடுத்து கடந்த சில தினங்களாகக் குடாநாட்டில் எரிபொருளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதனால், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில்- குடும்ப அட்டைகளுக்கே மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகின்றது. எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எரிபொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இதனால், கடற்தொழிலாளர்கள்- தமக்குத் தேவையான எரிபொருட்களைப் பெறமுடியாமையால் கடற்தொழிலைச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (ச)

# உடுப்பிட்டி விபத்தில் இரண்டு பேர் படுகாயம்

(நவிண்டில்)

உடுப்பிட்டி வீரபத்திரர் கோயிலுக்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் உழவு இயந்திரமும் மோட்டார் சைக்கிளும் மோதியதில், மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து பயணஞ்செய்த இருவர் பலத்த காயத்திற்கு உள்ளானார்கள்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த இராசா யோகதாஸ் (வயது-21) இடது காலில் பலத்த காயத்திற்குள்ளாகி மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வல்வெட்டியைச் சேர்ந்த த.பிரகாஷ் (வயது-16) என்பவர் தலையில் பலமாக அடிபட்டு மயக்கமுற்ற நிலையில், மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி மூலம் அனுப்பிவைக்கப்பட்டார்.

(116)

# தட்சணாமருதமடு முகாமிலுள்ள இடம்பெயர்ந்தோருக்கு நெருக்கடி

மன்னார் பிரதேசத்திலுள்ள தட்சணாமருதமடு இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள மக்கள் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இம்முகாம்களில் 351 குடும்பங்கள் இடம்பெயர்ந்து வசித்து வருகின்றனர். 373 குடும்பங்கள் குடியிருப்புக்களில் வசித்து வருகின்றனர்.

இக்குடும்பங்களிற்கு வழங்கப்படும் நிவாரண உணவுப் பொருட்கள் தரங்குறைந்தவையாக உள்ளதாக முகாம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், இம்முகாம்களிலுள்ள மக்களிற்குக் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதே வேளை, போதிய மருத்துவவசதிகள் இல்லாமையால், மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இம்முகாம்களில் தங்கியுள்ள 50 சிறுவர்கள் வறுமை காரணமாகப் பாடசாலைக்குச் செல்வதில்லை எனவும் தெரியவருகின்றது.

## சந்நிதியில் திருட்டு அதிகரிப்பு

(அச்சுவேலி)

தொண்டமனாறு செல்வச் சந்நிதிக்கு வரும் அடியார்களைப் பின்தொடர்ந்து வரும் திருடர்கள், பூசை நேரங்களில் நெருக்கடியைப் பயன்படுத்தி, பேர்சுகளில் இருந்து பணம் மற்றும் பெறுமதியான பொருட்களை அபகரித்துவிட்டு அடையாள அட்டை, வங்கிப் புத்தகங்கள் போன்றவற்றை எறிந்துவிட்டுச் செல்கின்றனர்.

இவ்வாறான சம்பவங்கள் கடந்த இரண்டு மாதங்களாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (76)

# பிரதேச செயலக விளையாட்டு விழா; மட்டுவில் கழகம் முன்னணியில்!

(அரியாலை)

சாவகச்சேரிப் பிரதேசசெயலகப் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் எல்லே, கிரிக்கெட் ஆகிய குழுப்போட்டிகளில் ஆண்கள் பிரிவில் முதல் இடத்தையும், கரப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தையும், எல்லே, கிரிக்கெட், கரப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளில் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தையும் மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டுக் கழகம் பெற்று, முதல் இடத்திலுள்ளது.

மேற்படி பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான மெய்வன்மைப் போட்டிகள் இம்மாதம் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. (55)

## கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர்சங்கக் கூட்டம்

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 11 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.



கரணவாய் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினர் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரன் உரையாற்றுவதையும், அதிபர் சி.நற்குணலிங்கம் மற்றும் பிரமுகர்கள் அருகில் இருப்பதையும் படத்தில் காணலாம்.

# சின்னஞ் சிறு செய்திகள்

## வைத்தியசாலை வீதியை மூடி மண் பறிப்பு

(பளை)

பளை வைத்தியசாலைக்குச் செல்லும் பாதையை மூடி, ஏ-9 வீதி திருத்த வேலைகளுக்கான மணல் பறிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர்தான் இப்பாதை சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது. எனினும், பாதையை மூடி இவ்வாறு மணல் பறிக்கப்பட்டிருப்பதால், பளை வைத்தியசாலைப் புனரமைப்புப் பணிகள் பாதிக்கப்பட்டிருப்பதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர். (115)

## மோட்டார் சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். மின்சார நிலைய வீதிப் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி மாலை மின்சாரநிலைய வீதிப்பகுதியிலுள்ள புடவை விற்பனை நிலையம் ஒன்றின் முன்னால் ரி.வி.எஸ்.விக்டர் மோட்டார் சைக்கிளை ஒருவர் நிறுத்திவிட்டு, கடையில் பொருட்கள் வாங்கிவிட்டுத் திரும்பி வந்தபோது, மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரின் பல பகுதிகளிலும் தொலைந்து - பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்ட ஒருதொகுதி அடையாள அட்டைகள் யாழ்ப்பாணம் நவீன சந்தைப் பகுதியில் இயங்கும் விளம்பர சேவையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பொன்னையா சபாரெத்தினம், பரமேஸ்வரி சபாரெத்தினம், இராசேந்திரம் ஜெயக்குமார், பரமலிங்கம் பரமேஸ்வரி, செல்லத்துரை இராசகுமார், விசுவலிங்கம் அரவிந்தன், சிவராசா பரமேஸ்வரி ஆகியோரின் அடையாள அட்டைகளே கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவற்றினை உரியவர்கள் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (சு)

## வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய ஸ்ரீ சத்யசாயி நிறுவனங்களால் நடாத்தப்படும் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் தொடர்ந்து 3 நாட்கள் வரை நடைபெறவுள்ளது.

# மதுபோதையில் இருந்தோர் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம்!

## உதவப்போனவருக்கு நடந்த உபத்திரவம்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையிலிருந்த இளைஞர் கோஷ்டி- வீதியிலால் சென்றுகொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவரைத் தாக்கியதில், அவர் காயமடைந்தநிலையில் யாழ். போதனா வைத்தியசாயையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் யாழ்.ஆலடிப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் சிவேத்தியார் வீதியைச் சேர்ந்த பி.சுரேஸ்குமார் (வயது 26) என்ற குடும்பஸ்தரே காயடைந்தவராவார்.

மதுபோதையில் இருட்டில் வந்துகொண்டிருந்த மூன்று பேர், வீதியை விட்டுவிலகிக் கிடங்கு ஒன்றினுள் வீழ்ந்துள்ளனர். இவர்களுடன் வந்திருந்த மற்றொருவர் மதுபோதையிலிருந்த இருவரையும் தூக்க முடியாதநிலையில் இருந்தார்.

மேற்படி இருவரையும் தூக்க, வீதியால் வந்துகொண்டிருந்த மேற்படி நபரிடம் உதவி கோரியுள்ளார். அவர் உதவமறுத்ததை அடுத்து, இவருடைய கழுத்தை நெரித்து மோசமாகத் தாக்கியுள்ளனர். இதனால், அடிகாயங்களுக்குள்ளான மேற்படி நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)



வல்வை மகளிர் கல்லூரியில் சுவாமி விவேகானந்தரின் கண்காட்சியை யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் திறந்துவைப்பதையும், அருகில் வல்வை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் மயிலேறும்பெருமாள், கல்லூரி அதிபர், சுவாமி சித்ரூபானந்தா ஆகியோரையும் படத்தில் காணலாம். (17)

# செட்டியக்குறிச்சி பாடசாலை, வீடுகளை புனரமைத்துத் தருமாறு வேண்டுகோள்

(சாவகச்சேரி)

பூநகரிச் செட்டியக்குறிச்சியிலுள்ள பாடசாலையினையும், அக்கிராமத்தில் அமைந்திருந்த 55 வீடுகளையும் மீளப்புனரமைத்துத் தருமாறுகோரி - யாழ். மாவட்ட அபிவிருத்தி நலவுரிமை சங்கத்தின் தலைவர் எஸ்.பத்மநாதன்- கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த காலங்களில் பூநகரியில் நிலைகொண்டிருந்த படையினரால்- செட்டியக்குறிச்சிப் பாடசாலையும், 55 வீடுகளும் முற்றாகத் தரைமட்டமாக்கி அழிக்கப்பட்டன.

தற்போது சமாதானச் சூழல் ஏற்பட்டுள்ளதையடுத்து, இப்பகுதிகளில் மீளக்குடியமர மக்கள் வந்தபோதிலும் மீள்குடியமர முடியாதுள்ளது.

எஸ்.பத்மநாதன் தலைமையிலான குழுவினர் கடந்த வாரம் பூநகரிக்கு விஜயம் செய்து, அப்பகுதிகளின் நிலைமைகளை நேரில் பார்வையிட்டனர்.

தற்போது மக்கள் மீளக்குடியமரும்போது இப்பகுதியில் சுகாதார நிலையமொன்றை அமைக்கும்படியும், அதற்கு தாம் ஒரு ஏக்கர் காணியினை வழங்குவதாகவும் பூநகரிக்கு விஜயம்செய்த பின் எஸ்.பத்மநாதன் - மேலதிக அரசாங்க அதிபரிடம் கோரியுள்ளார். (க)

# மகளை வல்லுறவுக்குட்படுத்திய ஐந்து பிள்ளைகளின் தந்தை!

36 வயது தந்தையொருவர் தனது பதினான்கு வயது மகளைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய சம்பவமொன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் ஐந்துசந்திப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது -

வீட்டிலே மனைவியில்லாத சமயம் பார்த்துத் தனது மகளை மேற்படி நபர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளார். இதனால், பயந்த நிலைமையிலிருந்த மகளிடம்- தாய் காரணத்தை விசாரித்தபோது, தந்தை தன்னைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாக அச்சிறுமி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்துத் தாய் தனது மகளுடன் பொலிஸ் நிலையம் சென்று கணவனுக்கு எதிராக முறையீடு செய்துவிட்டு, மகளை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்.

இச்சம்பவத்தோடு தொடர்புடைய நபர் 5 பிள்ளைகளின் தந்தை என்பதுடன், வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து, தனது பெயரையும் மாற்றியுள்ளார் எனவும் யாழ். பொலிஸ்நிலையக் குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி பிரேமரத்தின தெரிவித்தார்.

சிறுமி, பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டாரா என்பது பற்றிய விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (சு)

# கொற்புலவு மயானத்தை பயன்படுத்துவதை தவிர்க்குமாறு பிரதேசசபை கோரிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசசபையின் கச்சாய் உபபணிமனைப் பிரிவிலுள்ள அல்லாரை, கொற்புலவு மயானத்தில் சடலங்கள் தகனம் செய்யப்படுவதால்- அருகிலுள்ள வீடுகளில் வசிக்கும் மக்கள், சுகாதார அச்சுறுத்தலை எதிர்நோக்கியிருப்பதாகச் சாவகச்சேரிப் பிரதேச சபைக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் நிலவிய சூழ்நிலையில் இந்த மயானத்தில் பெருமளவிலான சடலங்கள் தகனம் செய்யப்பட்டன.

ஆனால், இப்பொழுது வேம்பிராய், கண்ணாடிப்பிட்டி போன்ற மயானங்கள் பாவனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளபோதிலும், அச்சூழலில் உள்ளவர்கள் அங்குள்ள மயானத்தைப் பாவிக்காது, கொற்புலவு மயானத்தில் தகனம் செய்வதையிட்டு மக்கள் பெரிதும் விசனம் அடைந்துள்ளனர்.

இதுசம்பந்தமாக பல தடவைகள் பிரதேசசபையால் பொதுமக்களிற்கு அறிவுறுத்தப்பட்டும், தொடர்ந்தும் இந்த மயானத்தையே மக்கள் பயன்படுத்திவருகின்றனர். (க)

# தென்னந்தோட்ட வருமான அதிகரிப்புக்கு

(சென்றவாரத் தொடர்ச்சி)

### மேற்கட்டுப் பசளை

4 - 6 கிழமைகள் நாற்று நாட்டியபின்- யூரியா 220 கிலோகிராம்

5 - 6 மாதங்கள் நாற்று நாட்டியபின்- யூரியா 220 கிலோகிராம்

9 - ஆம் மாதம் நாற்று நாட்டியபின் மியூரியற் ஒவ் பொட்டாசு 175 Kg.

### செதில் முட்டுப் பூச்சி

செதில் முட்டுப்பூச்சிகள் நடுகைத் துண்டங்களில் காணப்பட்டால் நடுகைக்கு முன்பு டைமீதொயோற்று 40% செறிகுளம்பில் 1 அவுன்ஸ் 10 லீற்றர் நீரில் கரைத்து (30 அவுன்ஸ்/ ஏக்கர்) துண்டங்களை நன்கு ஊற விடுக.

### தண்டு அழுகல்

அ) தடுப்பு:- நடுவதற்கு முன்பு நடுகைத் துண்டங்களைக் "கப்ரபோல்" கரைசலில் (டை'.பொலறான் 1 றாத்/10 கலன் நீர்) தோய்க்க வேண்டும்.

ஆ) நோயால் பாதிக்கப்பட்ட தாவரங்களின் வேர்கள் காணப்படும். பகுதிகளில், உள்ள மண்ணைக் கப்ரபோல் (டை'. பொலறான் 1 றாத்/10 கலன் நீர்) கரைசலினால் நனைக்க வேண்டும். இதன் பின்பு தாவர அடிக்கு, மண் அணைத்துப் புதிய பக்க வேர்கள் வளர்வதற்கு இடமளிக்க வேண்டும்.

### விளைச்சல்

1) இரு தனி நிரைகள்: 10 மெற்றிக்தொன் /ஹெக்ரயர்

2) இரு தனி நிரைகள் : 15 மெற்றிக் தொன் / ஹெக்ரயர்

3) இரண்டு தனி நிரைகளும் ஓர் இரு வரிசை நிரையும்: 20 மெற்றிக் தொன்/ ஹெக்ரயர்

## பயிர்ச் சேர்க்கை

### 1. தென்னையின் கீழ்

### வாழை

வாழை வரிசை 3-4 மீற்றர் (10 அடி-13 அடி), 2.5 மீற்றர் (8 அடி) நீள அகலம் உடைய இடைவெளி இருத்தல் வேண்டும்.

நடுகைக் குழியின் அளவு 0.6 மீ x 0.6 மீx0.6 மீ. (2'x 2'x2') அடி.

காற்றுள்ள இடமாயின், 1மீ.x 1மீ.x 1 மீ (3' x 3' x 3') அடி.

### உரப்பிரயோகம்

☆ யூரியா - 1பகுதி நிறுத்தல் அளவையில்

☆ சப்போஸ்பொசுபேற் - 1 பகுதி நிறுத்தல் அளவையில்

☆ மியூரியற் ஒவ் பொட்டாசு - 4 பகுதி நிறுத்தல் அளவையில்

### அளவுகள்

900 கிராம் உரக்கலவை நாட்டி 2 ஆம் மாதத்தலும், பின்ப 6 ஆம் மாதத்திலும் இடுக.

### பிரயோக முறை

வாழை மரத்தினைச் சுற்றிவர 10cm (4 அங்குலம்) ஆழத்தில் கொத்திப் பிரட்டிய பின்பு தூவி விடுக.

### 2. தென்னையின் கீழ்

### கொடித் தோடை

வர்க்கங்கள்: மஞ்சட் பழம் கொண்ட தாவரம் (பசி.'.புளோரா எடியூலிஸ்.'.பிளேவி காப்பா (Pasiflora edijulis flavicapa)

இடைவெளி: 5 மீற்றர் x 2 மீற்றர்

நடுகைக்காலம்: பெரும்போக, சிறுபோக மழையுடன் இடுக.

நடுகைமுறை: தென்னை நிரைகளுக்கு இடையே 2 நிரைகளில்

### பசளைப்பாவனை

ஈரவலயம்: NPK (12:14:14)

உலர்வலயம்: NPK (14:21:14)

### பசளை அளவுகள்

1) நட்டு 6 மாதங்களின் பின்பு 225 கிலோ/கொடி

2) நட்டு 12 மாதங்களின் பின்பு 225 கிலோ/கொடி

3) நட்டு 2 ஆம் வருடங்களின் பின்பு 450 கிலோ / கொடி /வருடம்

4) நட்டு 3 ஆம் வருடங்களின் பின்பு 675 கிலோ / கொடி /வருடம்

5) நட்டு 4 ஆம் வருடங்களின் பின்பு 900 கிலோ / கொடி/வருடம்

### இலைகளுக்குத் தெளித்தல்

இலைகளில் நரம்புகளுக்கிடையேயான பகுதிகள் வெளிறிக் காணப்பட்டால், 2% Mg $SO_4$ கரைசலை (மகனீசியம் சல்பேற்) இலைகளுக்கு விசிறவும்.



### உரமிடப்படும் முறை

சிபார்சு செய்யப்பட்ட அளவுகளில் ஒவ்வொரு தாலரத்தையும் சுற்றிவர இடுக.

### பூச்சி, பீடைக் கட்டுப்பாடு

கொடிவலயம் ஏற்படுத்தும் பூச்சியின் (Vine girdler) விருத்தி நிலைகளைக் கட்டுப்படுத்த இறநத உலர்ந்த கொடித் தோடைக் கொடிகளை அகற்றிச் சுத்தமாக வைத்திருக்கவும். அதிகளவு தாக்கம் காணப்பட்டால், (பூச்சி கொல்லி) உதாரணமாக மொனோகுரோடோபஸ் விசிறுக.

### கழுத்து அழுகல்

அ) வடிகால் வசதிகளை ஏற்படுத்திக் கழுத்து அழுகல் நோயைத் தடுக்க வேண்டும்.

ஆ) கழுத்து அழுகல் காணப்படும் இடங்களில் றிடோமில் கலவையினால் தாவரம் நடப்பட்டுள்ள இடத்தினை நன்கு நனைக்க வேண்டும்.

### 3. தென்னையின் கீழ்

### எலுமிச்சை

வர்க்கங்கள்:

a) உள்ளூர் எலுமிச்சை

b) 'தகிட்டி' விதைகளற்ற இறக்குமதி செய்யப்பட்ட இனம்)

c) லெமனிம் (லெ்மன் எலுமிச்சை என்பவற்றின் கலப்பு)

☆) உள்ளூர் எலுமிச்சை: உளளூர் எலுமிச்சையை உலர் இடை வலயங்களில் பெருமளவிலும், தாழ் பிரதேச ஈரவலயத்தில் குறைந்த அளவிலும் செய்கை பண்ணலாம்.

☆) 'தகிட்டி': நாட்டின் மத்திய பிரதேசமும், மலைநாட்டின் பகுதி உலர்வலயப்பகுதியான வெலிமடை தொடக்கம் பதுளை வரையான பிரதேசமும் தகிட்டி இன எலுமிச்சையைப் பயிரிட உகந்ததாகும்.

☆) லெமினிம்: இது நாட்டின் உலர் வலயம் உட்பட சகல பகுதிகளிலும் சிறப்பாக வளரக்கூடியது.

### இடைவெளி

உள்ளூர் எலுமிச்சை - 4 மீற் x 3 மீற்

*தகிட்டி - 3 மீற் x 3 மீற்*

*லெமனிம் - 2 மீற் x 2மீற்*

### நாற்றுக்களை உற்பத்தி செய்தல்

உள்ளூர் எலுமிச்சை விதைகள் மூலமாகவும், தகிட்டி, லெமனிம் பொதுவாக ஒட்டுதல் அல்லது வேர்விட்ட துண்டங்கள் மூலமாகவும் இனப்பெருக்கம் செய்யப்படலாம். உள்ளூர் எலுமிச்சையை நன்கு முற்றிய எலுமிச்சம் பழங்களிலிரந்து எடுத்து உடனடியாக முளைக்கவிடல் வேண்டும். லெமனிம் வேர்விட்ட துண்டங்கள் மூலம் விருத்தியாக்கப்படுகின்றது. 2-3 இலைகள் கொண்ட 10 -15 செ.மீ. நீளமான இடை வைரத் துண்டங்கள் மரத்தூள் அல்லது மண் கொண்ட நீரூடகத்தில் நிழலின் கீழ் ஊன்றப்பட்டு நீரூற்றப்படல் வேணடும். துண்டங்கள் வேர்விட்டபின், நடுகைக்காகக் கொண்டுசெல்லப்படும்போது, மண் நிரப்பிய பொலித்தீன் பைகளில் மாற்றி நாட்டலாம்.

### நடுகை முறை

தென்னை நிரைகளுக்கு இடையே 60 செ.மீ. நீள, அகல, ஆழம் கொண்ட குழிகளை நடுவதற்குச் சிறிதுகாலம் முன்பதாக வெட்டப்பட்டுச் சிறந்த மண், உக்கிய மாட்டெரு என்பவற்றினால் நிரப்பப்பட வேண்டும்.

### பசளையிடல்

நடுகையின்போது சிற்றஸ் மிக்சர் (Citrus Mixture) உலர் இடைவலயம் 16:20:12 ஈரவலயம் 15:15:7) 225g ஒவ்வொரு குழிக்கும் இடப்பட்டு மண்ணுடன் நன்கு கலத்தல் வேண்டும். இக்கலவையை மரமொன்றுக்கு 225 கிராம் என்ற அளவில் வருடாவருடம் அதிகரித்து ஆகக்கூடியது 1350 g என்ற அளவுவரை இடல்வேண்டும். உரக்கலவையை நாற்றுக்களின் அடியிலிருந்து 15 - 20 செ.மீ.தூரத்தில் வட்டமாக இடப்பட்டு மண்ணுடன் நன்கு கலக்கப்படல் வேண்டும். காய்க்கும் மரங்களுக்கு 1350 கிராம் சிற்றஸ் மிக்சர் வருடாவருடம் இடல் வேண்டும். அத்துடன், 2 - 3 கூடை நன்கு உக்கிய மாட்டெரு இடுதல் நன்று. ஈரவலயமாயின் 21/2 கிலோ/ வருடம்/ மரம் என்ற அளவில் டொலமைற்றை உரம் இடுவதற்கு 2 கிழமைக்கு முன்னர் இடுதல் அவசியம்.

களையகற்றல்: தேவையைப் பொறுத்துக் களையகற்றல் வேண்டும்.

கத்தரித்தல்: முழங்கால் அளவு உயரம் வரை மரத்தில் தோன்றும் பக்கக் கிளைகள் அகற்றப்பட்டுத் தனித், தண்டாய் பேணல்வேண்டும்.

பீடைக்கட்டுப்பாடு: பூச்சீவகையைப் பொறுத்துத் தெரிவுசெய்யப்பட்ட பூச்சிநாசினிகளில் ஏதாவதொன்றை விசிறலாம்.

அறுவடை: உள்ளூர் எலுமிச்சை காய்ப்பதற்கு 3 - 4 வருடங்கள் எடுக்கும். இதன் பிரதான காய்க்கும் காலம் மாசி முதல் ஆடி வரை ஆகும். லெமனிம் 12 - 13 மாதங்களில் காய்க்கத் தொடங்கி வருடம் முழுவதும் விளைச்சலைத் தரும்.

### 4. ஐந்து வயதிற்குக் கீழ் அல்லது 25 வயதுக்கு மேற்பட்ட தென்னைகளுக்குக் கீழ் மரவள்ளி நடுதல்.

வர்க்கங்கள்:- MU, 51 CARI 555

இடைவெளி:- 90 செ.மீ x 90 செ.மீ

நடுகைக்காலம்:- சிறுபோகம் அல்லது பெரும்போக மழை ஆரம்பத்துடன்.

பசளைப்பாவனை:- மரவள்ளிக்கு மாத்திரம். தென்னைக்குத் தனியாக APM இட வேண்டும். (தொடரும்...)

**ஜெ.சத்தியேந்திரன்**
**என்.டீ.ரீ (விவசாயம்)**

### விளைவும் மொத்த வருமானமும்.

| வளர்ச்சிக்காலம் | விளைவு (kg/Hec கிலோ/ ஹெக்ரயர்) | மொத்த வருமானம் ரூபா / ஹெக்ரயர் |
|---|---|---|
| 1 ஆம் வருடம் | 400 | 1200 (கிலோ 3/ |
| 2 ஆம் வருடம் | 2500 | 7500 |
| 3 ஆம் வருடம் | 3500 | 10500 |
| 4 ஆம் வருடம் | 3000 | 9000 |
| 5 ஆம் வருடம் | 2000 | 6000 |
| மொத்தம் | 11400 | 34200 |

# உதவக்கூடிய ஊடுபயிர்ச் செய்கை

உழைப்போம் உயர்வோம்!

தொழில் மலர்


# சுற்றுச் சூழல் மாசடைதலைத் தவிர்க்கும் தூய உற்பத்திக் கைத்தொழில் முறைமை

### தூய உற்பத்தியை எவ்வாறு செயற்படுத்தலாம்?

(சென்றவாரத் தொடர்ச்சி)

தூய உற்பத்தி இரண்டு முக்கியமான பகுதிகளைக் கொண்டது. அதாவது கணக்கெடுத்தல் (கணக்காய்வு) மற்றும் செயற்படுத்தல் ஆகியவையாகும். இதுவொரு குழுச் செயற்பாடாகும். ஏதேனுமொரு தொழில் முயற்சிக்காகத் தூய உற்பத்திமுறை பிரயோகிக்கப்படுகையில், தூய உற்பத்திக் குழுவொன்று தெரிவுசெய்யப்படும். இவர்களின் ஆரம்ப நடவடிக்கை கணக்காய்வு செய்வதாகவே அமையும். இவ்வேளையில் தொழில் முயற்சியின் விரயங்கள் இனங்காணப்பட்டு அவை கணிப்பீடு செய்யப்படும். மூலப் பொருட்களின் எஞ்சுகின்ற அளவினையும், கழிவுப்பொருள்களின் எஞ்சுகின்ற அளவினையும் கணிப்பிடுவதன் மூலமாகத் தொழில் முயற்சிகள் நடப்பு நிலைமை மற்றும் நட்டம் தொடர்பான அறிவினைப் பெற்றுக்கொள்ளலாம். அதன் பின்னர் விரயத்தை மதிப்பீடு செய்ய இயலும், அதன் பின்னர் விரயத்திற்கேதுவான காரணங்கள் பற்றி ஆராயப்படும். விரயத்தை முற்றாகத்தடுக்கவோ, குறைக்கவோ எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும் கிரமமான பணி அதன் பின்னர் மேற்கொள்ளப்படும்.

தெரிவுசெய்யப்பட்ட முன்மொழிவுகளை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னராக




தூய உற்பத்தி - இலாபத்தை மேம்படுத்தும்.

அவை பகுதிகளாகப் பிரிக்கப்படும். அதாவது செலவுகள் அற்றவை, குறைந்த செலவுகள் உள்ளவை, நடுத்தரமான செலவுகள் உடையவை மற்றும் அதிக செலவுகள் உடையவை என்ற அடிப்படையிலாகும். அத்தகைய செலவுகளைச் செலவு ஈடு செய்கின்ற காலப்பகுதிகளும், பிறநலன்களும் பற்றி ஆராயப்படும். செலவுகளற்ற மற்றும் செலவுகள் குறைவான முன்மொழிவுகளை உடனடியாக நடைமுறைப்படுத்தலாம். பணம் முதலீடு செய்யப்படக்கூடிய வேளையில் ஏனைய முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் வைத்துக்கொள்ளப்படும்.

### தூய உற்பத்திக்கு உதவி புரிவோர் யாவர்?

தூய உற்பத்திக் கோட்பாட்டினை நடைமுறைப்படுத்துகையில் அதற்கான உதவிகளை வழங்கத் தேசிய தூய உற்பத்தி நிலையம் (தே.தூ.உ.நி.) தயாராகவுள்ளது. சரியான தூய உற்பத்திக் குழுவொன்றினைத் தெரிவு செய்வதிலிருந்து தூய உற்பத்தியின் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளும்வரை எந்தவிதமான ஒத்துழைப்பினையும் வழங்க தே.தூ.உ.நி. தன்னை அர்ப்பணித்துள்ளது. (முற்றும்)

**தருவது:**
**வர்த்தகக் கைத்தொழில் சம்மேளனம்.**

# இறால் வளர்ப்பு;

## அடிப்படை வசதிகளும், கட்டமைப்பும்

உலகெங்கும் இறால் வளர்ப்பானது இன்று பெரும் இலாபமீட்டும் கைத்தொழிலாக வளர்ந்து வருகின்றது. இறால் பண்ணைக் கைத்தொழில்கள், வேலைவாய்ப்பு, அந்நியச் செலாவணி ஈட்டம், இயற்கை வளப்பயன்பாடு, புரத உணவு வழங்கல் என்பனவற்றை நல்குகின்ற அதேவேளை, இறால் பண்ணைகளில் மேற்கொள்ளும் பொறுப்பற்ற முகாமைத்துவ நடவடிக்கைகள் சூழலுக்கு அச்சுறுத்தலாகவும் அமைகின்றன.

இறால் பண்ணைகளைப் பரந்தளவில் விஸ்தரிப்பதற்கும், அவற்றின் சிறப்பான நிலவுகைக்கும், இறால் குஞ்சுகளைப் போதியளவில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல் இன்றியமையாததாகும்.

இறால் பண்ணைக் கைத்தொழில்களின் வளர்ச்சிக் காலங்களில் பண்ணைகளில் வைப்பிடுவதற்கு வேண்டிய குஞ்சுகள் இயற்கையாக கடல், கடல்நீர் ஏரிகள் என்பவற்றிலிருந்து சில குறிப்பிட்ட பருவகாலங்களில் மாத்திரம் சேகரிக்கப்பட்டு வந்தன.



இறால் பண்ணைக் கைத்தொழில்களின் உலகளாவிய விஸ்தரிப்பினால்- இறால் குஞ்சுகளுக்கு ஏற்பட்ட தேவையை இயற்கையாகச் சேகரிப்பதன் மூலம் ஈடு செய்ய இயலாமையினால், இத்துறைசார் அறிஞர்களின் பெருமுயற்சியால் (DR.Motosaky Fujinaga, 1934 இல்) செயற்கை நிலைமைகளின் கீழ் இறால் குஞ்சுகளை உற்பத்தி செய்துகொள்வது சாத்தியமாயிற்று.

இறால் குஞ்சுகளை உற்பத்தி செய்யும் நிலையங்கள்- இறால் குஞ்சுற்பத்தி நிலையங்கள் எனப்படும். இறால் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்காக, குஞ்சு உற்பத்தி நிலையங்கள் எதிர்பார்க்கும் அம்சங்களும், தேவைகளும் "வசதிகள்" எனப்படும். இவ்வசதிகளை வழங்குகின்ற அமைப்புகள் "கட்டமைப்புகள்" எனப்படும். இறால் குஞ்சுகளை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள்- குஞ்சு உற்பத்தி நிலையங்களின் "தொழிற்பாடுகளாகும்" என வரைவிலக்கணப்படுத்தப்படும்.

இறால் குஞ்சுற்பத்தி நிலையங்கள், இறால் குஞ்சுற்பத்திக்காலம் முழுவதும் தொடர்ச்சியாக 24 மணி நேரமும் இயங்கிக் கொண்டிருக்கும். (வைத்தியசாலைகளின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவு போன்று) இறால் குஞ்சுற்பத்தி நிலையங்கள், உற்பத்தி செய்யப்படும் இறால் குஞ்சுகளின் இனம், அவற்றின் எண்ணிக்கை, மூலதன வசதி என்பவற்றிற்கு ஏற்ப தொழிற்பாடு மற்றும் கட்டமைப்பில் வேறுபடக்கூடியன.

பொதுமைப்பாடான ஓர் இறால்க் குஞ்சு உற்பத்தி நிலையமானது- பிரதானமாக 4 கட்டமைப்புத் தொகுதிகளைக் கொண்டிருக்கும்.

1.பொறியியல் கட்டமைப்புத் தொகுதி

2.குஞ்சு உற்பத்திக் கட்டமைப்புத் தொகுதி

3.உணவு உற்பத்தி, பதப்படுத்தல் கட்டமைப்புத் தொகுதி

4.முகாமைத்துவக் கட்டமைப்புத் தொகுதி

### பொறியியல் கட்டமைப்புத் தொகுதி

இறால் குஞ்சு உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்கான இடத்தெரிவை மேற்கொள்ளல், குஞ்சுற்பத்தி நிலையத்தின் நிர்மாணம், கடல் (உவர்) நீர் சேகரித்தலும், சுத்திகரித்தலும், வளியூட்டல், மின்சார உற பத்தியும் மின்வழங்கலும், கழிவுநீர் அகற்றல், கழிவுநீர் சுத்திகரித்தல் போனற வசதிகளை வழங்கும் கட்டமைப்புத் தொகுதியாகும்.

இறால் குஞ்சுற்பத்தி நிலையத்தை நிர்மாணிக்கும் இடத்தெரிவானது- சாத்தியத்தன்மை, நிரூபன ஆய்வு (feasiblity study) மூலம் தீர்மானிக்கப்படுகின்றது.

இறால் குஞ்சுற்பத்தி நிலையத்தினை நிர்மாணிப்பதற்காகத் தீர்மானிக்கும் இடமானது, பின்வரும் சாத்தியத் தன்மைகளை நிரூபிக்கவேண்டும். அவையாவன- போதிய கடல் நீர்வளம், நன்னீர் வளம் தாராளமாக, மலிவானவிலையில் பெற்றோர் இறால்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாயிருத்தல், தளம்பலற்ற 24 மணி நேர மின்வலு விநியோகம், போதுமான தொழிலாளர் வசதி, இலகுவான போக்குவரதது வசதி, சந்தை வாய்ப்பு (இறால் பண்ணைக் கைத்தொழில்கள் பெருமளவு நடைபெறும் இடத்திற்கு அண்மையாக இருத்தல்) என்பனவாகும். இவ்வாறு தீர்மானிக்கப்பட்ட இடத்தில் இறால் குஞ்சுற்பத்தி நிலையக் கட்டடத் தொகுதி அமையும்.

### கடல்நீர் சேகரித்தலும் சுத்திகரித்தலும்

கடல் நீரானது அதன் உவர்த்தன்மை 28 p.p.t (parts per thousands) இற்கும் அதிகமாக உள்ளபோது, கடற்கரையில் அமைக்கப்பட்ட ஆழ்குழாய்க் கிணறுகளிலிருந்து நீரிறைக்கும் இயந்திரங்களினால் பாரிய உயரமான தடாகங்களில் அடையவிடப்படும். இத்தடாகங்களின் கொள்வனவு குடம்பி உற்பத்தி நிலையத்திற்குத் தேவையான நீரின் கனவளவிற்கும் அதிகமாக இருத்தல் வேண்டும். இவ்வாறு அடைய விடப்பட் நீரானது முறையே- மணல் வடிகட்டிகள், கரிமணல் அமுக்க வடிகட்டிகள், காட்ரேஜ் அமுக்க வடிகட்டிகள், ஊதா கடந்த கதிர் தொற்றுநீக்கி உபகரணங்கள் என்பவற்றால் தொற்று நீக்கப்பட்ட பின்னரே இறால் குஞ்சுற்பத்தி நிலைய நடவடிக்கைகளில் பயன்படும்.

### வளியூட்டல்

பெற்றோர் இறால்கள், வளரும் இறால் குஞ்சுகள், உயிருணவுகள் (ஆட்டிமியா, அல்கா) என்பவற்றின் உயிர் வாழ்க்கைக்கு தேவையான பிராணவாயு (ஒட்சிசன்) ஆனது நீரில் கரைந்தநிலையில் இருத்தல் அவசியமாகும். இதற்காக வளியூட்டும் இயந்திரங்களினால் 24 மணித்தியாலங்களும் தொடர்ச்சியாக வளியானது- நீரினுள் வளிக்கற்களின் (Air stones) ஊடாகச் செலுத்தப்பட்டு, நீரினுள் குமிழிகளாகப் பரவச் செய்யப்படும். வழங்கப்படும் வளியானது- மசகு எண்ணெய்ப் பிசுக்கற்றதாகவும், சீரான கதியுடனும் வழங்கப்படல் அவசியம். (Air stones - வளிக்கற்களானது வளியைப் பல நுண்குமிழ்களாக்கி நீரினுள் பரவச் செய்வதன் மூலம் அவற்றின் கரைதிறனைத் துரிதப்படுத்துகின்றன.

### மின்சார உற்பத்தி

இறால் குஞ்சுற்பத்தித் தொட்டிகளின் (உள்ளக) வெப்பநிலைச் சீராக்கத்திற்கும், தாவர உயிருணவு (அல்கா) உற்பத்திக் கட்டமைப்புத் தொகுதிகளுக்கு வேண்டிய புளோரொளிர்வுக் குழாய் விளக்குகளைத் தொடர்ச்சியாக ஒளிர்விப்பதற்கும், அல்கா வளர்ப்பு அறைகளைக் குளிர் ஊட்டுவதற்கும், இறால் குஞ்சு வளர்ப்பு அல்கா, ஆட்டிமியா உற்பத்திக்குத் தேவையான உபகரணங்களைத் தொற்றுநீக்கலுக்கும் மின்சாரம் அவசியமாகும்.

(தொடரும்...)

மா.ஸ்ரீஸ்கந்தகுமார்
யாழ்.பல்கலைக்கழகம்

# அமைதிப்படை சென்ற பின்னும்

அமைதிகாக்கும் படையுடன் அள்ளுண்டு வந்த விஷக்களை பாதீனியம் - தற்போது கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர், நிலாவரை, உரும்பிராய், மருதனார்மடம், புன்னாலைக்கட்டுவன் போன்ற இடங்களில் வளமான பயிர்நிலங்களை ஆக்கிரமித்து வருகின்றது.

2000 ஆம் ஆண்டிலிருந்தே பாதீனியம் பற்றிய விழிப்புணர்வு- மக்களுக்கும், வேளாண் பெருமக்களுக்கும் பத்திரிகை வாயிலாகவும், கருத்தரங்குகள் மற்றும் பாதீனிய ஒழிப்புவாரம் போன்ற பல்வேறு வழிமுறைகளில் எடுத்துச் சொல்லப்பட்டும், இன்னும் வீட்டுப்படலையுடன்கூட பாதீனியம் செழித்து வளர்வதைக் காணமுடிகிறது. இந்நிலை இன்னும் பாதீனியத்தின் பாதிப்பை உணராத தன்மையா? அன்றி நமக்கென்ன நஷ்டம் என்கின்ற சுயநலப் போக்கா? என்ற கசப்பான சந்தேகம் எழுகின்றது.



## தொடரும் அந்நிய ஆக்கிரமிப்பு

இந்நிலையில் எமது வளமான மண்ணை ஆக்கிரமித்துள்ள அந்நியக் களையை அழிப்பது என்கின்ற பொறுப்பை மக்களிற்கு ஊட்டப்படவேண்டும்.

அண்மைக்காலமாகப் பாதீனியம் என்னும் தாவரம் ஒன்றின் பெயர் யாழ். மாவட்டத்தில் மிகவும் பரவலாகப் பேசப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. எங்கள் மண்ணை அந்நியதேசக் களைப்பீடையாக ஆக்கிரமிக்கும் ஒரு தாவரமே பாதீனியம். இது பயிர்த் தாவரங்களிற்கு மட்டுமல்லாது, கால்நடைகளிற்கும், மனிதர்களிற்கும் நச்சுக்களையாக அமைந்துள்ளது.

### தாவரத்தை இனங்காணல்

மூக்குத்திப் பூண்டுக் குடும்பத்தைச் சேர்ந்த இச்செடியானது, கிட்டத்தட்ட 2 மீற்றர் உயரம் வரை வளரக்கூடியது. இலை, தண்டுப் பகுதியில் பச்சை நிறமாகவும், பூக்கள் வெள்ளை நிறச் சிறிய கொத்துக்களாகவும் காணப்படும். இதன் இலைப்பரப்பு அதிகளவில் பிரிந்திருப்பதோடு- இலைப்பரப்பிலும், தணடிலும் உரோமங்கள் காணப்படும். நன்கு வளர்ந்த தாவரம் ஒன்று 15 ஆயிரம் விதைகள்வரை உற்பத்தி செய்யும்.

### பரவும் முறை

காற்றின் மூலமாகவும், விலங்குகளில் உணவுக்கழிவு மூலம் விலங்குகளின் உடலில் ஒட்டி நீரோட்டத்துடன் அள்ளப்பட்டும், பரவும்.

### களையினால் ஏற்படக்கூடிய தீமைகள்

இந்தக் களையினுடைய பூவிலிருக்கும் மகரந்த மணிகள்- ஏனைய பயிர்களின் கருக்கட்டலையும், காயுருவாகுவதையும் தடைசெய்யும். இக்களையில் அடங்கியுள்ள "பாதீனின்" என்ற இரசாயனப் பொருள் மண்ணில் சேர்வதனால் மற்றைய பயிர்களின் வளர்ச்சி பாதிக்கப்படும். இதனால், 30 %-40 %வரை விளைச்சல் குறையலாம். அவரையினப் பயர்களில் "இறை சோபியம்" பற்றீரியாவின் ஒன்றிய வாழ்வின் மூலம் உருவாகும் வேர்முடிச்சுக்களால் தழைச்சத்து மண்ணில் நிலை நாட்டப்படுவது பாதிப்புறும். வேர், இலை, தண்டுப் பகுதிகளிலிருந்து வெளிவரும் சுரப்புக்கள்- பயிர்- விதை முளைத்தலையும், பயிர்- தாவரவளர்ச்சியையும் நிரோதிக்கும். சிற்றினத் தாவரங்கள் பூண்டோடு அழிக்கப்பட்டுவிடும்.

கால்நடைகளிற்கு நாக்கில் புண், வாய்ப்புண், குடல்புண் தோன்றும். தோல் நிறமிழக்கும். பால் கசக்கும். பாதினீயத்தை உட் கொண்ட கால்நடைகளின் பாலி லும் விஷம் இருக்கலாம்.

மனிதனுக்குத் தோலரிப்பு, சிவப்புநிறத் தடிப்புக்கள், கொப்புளங்கள், மூக்கில் நீர்வடிதல், தும்மல், சளி, மூக்கடைப்பு, காய்ச்சல், மூச்சுவிடத் திணறுதல், ஆஸ்து மாவின் அறிகுறி என்பன இருக்கும்.

### கட்டுப்படுத்தும் முறை

பூக்கள் உருவாகுவதற்கு முன்னர் மண்வெட்டியால் கொத்தி எரித்து விடுதல். பூக்கள் உருவாகுவதற்கு முன்னர் "கிளை போசேட்" களைநாசினியைத் தாவரம் நன்கு நனையும் வரை விசிறுதல். பூத்திருப்பின் கை, மூக்கு, வாய் போன்ற பகுதிகளை மூடித் துணி அணிவது நல்லது. பூக்கள், விதைகளுள்ள களைகளை- வேறு பயிர்களுடன் ஏனைய இடங்களுக்குக் கொண்டுசெல்வதைத் தவிர்த்தல். களை காணப்படும் பிரதேசங்களிலிருந்து வேறிடங்களுக்கு மண் கொண்டு செல்வதைத் தவிர்த்தல். ஒவ்வொரு வீட்டிலும் அன்றாடம் சலவைக்குப் பின் மீதமுள்ள கழிவு சோப்பு நீரில் 5 பங்குக்கு 1 பங்கு சமையல் உப்பைக் கரைத்து, வெயிலில் வீட்டைச் சுற்றியுள்ள களையின் மீது தெளிக்கலாம்.

சாக்கடை தேங்கியிருக்கும் இடங்களிலும், சுண்ணாம்புச் சுவர்களிலும், கொங்கிரீட் இடுக்குகளிலும் முளைக்கும் இச்செடியின் ஒவ்வாமையினால்- பலர் தற்கொலைக்குக்கூடத் தூண்டப்படுகின்றனர்.

பூத்த பாதீனியத்தைக் கட்டுப்படுத்த 5 லீற்றர் நீரில் 5 கிராம் சலவைச் சோப்பு, 1 கிலோ, சமையல் உப்பு ஆகியவற்றைக் கரைத்து வெயிலில் விஷக்களையின் மீது தெளித்தல். களை 5 நிமிடங்களில் வாடிவிடும். பாரினையே தீனியாக்க வந்த பாதீனியத்தை முற்றாக அழித்து, தொடர்ந்து மேற்குறிப்பிட்ட கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடிக்குமாறு சகலரையும் கேட்டுக் கொள்கிறோம்.

தருவது:-
தகவல் தொடர்பு மையம்,
மாணவர் பகுதி,
விவசாயபீடம்,
கோணாவளை வீதி,
திருநெல்வேலி.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | நெல்லியடி | ஊர்காவற்றுறை | யாழ்ப்பாணம் |
|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 40/- | 40/- | 30/- | 45/- |
| உருளைக்கிழங்கு | 90/- | 90/- | 80/- | 100/- |
| கத்தரிக்காய் | 15/- | 20/- | 20/- | 25/- |
| பாகற்காய் | 40/- | 40/- | 40/- | 35/- |
| வெண்டைக்காய் | 15/- | 30/- | 20/- | 30/- |
| முருங்கக்காய் | 200/- | 140/- | * | * |
| கரட் | 45/- | 40/- | 40/- | 50/- |
| பீற்றூட் | 40/- | * | 30/- | 30/- |
| வெங்காயம் | 30/- | 30/- | 20/- | 30/- |
| பச்சைமிளகாய் | 25/- | 30/- | 30/- | 35/- |

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

இனத்துஆற்றி எண்ணாத வேந்தன் சினத்துஆற்றிச்
சீறின் சிறுகும் திரு. - திருக்குறள்

## நமது நோக்கு

### ஆரம்பிக்கிறது அவலம்!

ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்டு வருகின்ற இராணுவ நடவடிக்கையில் நேற்று பக்தாத்தில் - மக்கள் கூடும் இடங்களின் மீது நடாத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதல்களில் பல ஈராக்கியப் பொது மக்கள் கொல்லப்பட்டிருப்பதாக வெளியான செய்தி - உலகமே அஞ்சிநின்ற மனித அவலம் அங்கு தீவிரம் பெற்றுவருகின்றமையை எடுத்துக்காட்டியுள்ளது.

இதுவரை - அமெரிக்கப்படைகளின் முன்னேற்ற முயற்சிகளும், ஈராக்கின் கேந்திர நிலையங்கள் மீதான தாக்குதல்களும் - இருதரப்புப் படையினருக்கு இடையிலான யுத்தமாகவே வெளிப்படுத்தப்பட்டு வந்த நிலையில் - நேற்றைய தாக்குதல், அப்பாவிப் பொதுமக்களைக் குறிவைத்து நடத்தப்பட்டிருப்பது- யுத்தம் எல்லைமீறி, அழிவை நோக்கிச் சென்று கொண்டிருப்பதையே உணர்த்துகின்றது.

ஈராக் மீதான தாக்குதலை, அமெரிக்கா ஆரம்பிப்பதற்கு முன்பே - அங்குள்ள பொதுமக்கள் தாக்கப்படலாம், கொல்லப்படலாம், மாபெரும் மனித அவலங்கள் அரங்கேறலாம் என்ற அச்சத்தின் காரணமாக - உலகந்தழுவிய எதிர்ப்புப் போராட்டங்கள் பெருமெடுப்பில் நடாத்தப்பட்டன.

அமெரிக்கா தன் ஆதாயத்துக்காகவும் - ஈராக்கியத் தலைமை தனது சர்வாதிகாரப் போக்கை நிலைநிறுத்துவதற்காகவும் போரிற்கான தயார்ப்படுத்தல்களில் நாட்டம் காட்டியபோது - இருதரப்பின் செயற்பாடுகளும் யுத்தத்தை நோக்கி நகர்ந்த போது - போரிற்குள் சிக்கி அவலப்படும் பொது மக்களின் நிலைபற்றி உலகளாவிய கவனம் எழுந்தது.

ஆனால் இவையெல்லாவற்றையும் புறந்தள்ளிவிட்டு - அமெரிக்கா ஆரம்பித்த யுத்தம் - இன்று உலகின் அச்சத்தை நிஜமாக்கியிருக்கிறது.

ஏற்கனவே போர் ஆரம்பித்த முதல் நாட்களில்- ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான பஸ்ராவின் மீது நடாத்தப்பட்ட விமானத் தாக்குதல்களாலும், ஏவுகணை வீச்சுக்களாலும் - அந்நகரம் முற்று முழுதாகவே சிதைக்கப்பட்டதால் - அங்கு வாழும் மக்கள் தமது அடிப்படை வசதிகள் அனைத்தையும் இழந்து - குறிப்பாக - மிக அவசியமான குடிநீர் வசதிக்கு அல்லாடும்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அந்நகருக்கான பிரதான குடிநீர் விநியோகப் பாதைகளும், விநியோக மையமும் - அமெரிக்கப் படைகளின் தாக்குதலில் அழிக்கப்பட்டதாலேயே இத்துயரநிலை உண்டானது.

இந்தவகையில் - நேற்று பக்தாத்தில் நடாத்தப்பட்ட மக்கள் குடிமனைகள் மீதான தாக்குதல் - யுத்தம் நேரடியாகவே ஈராக்கிய மக்களைப் பாதிக்க ஆரம்பித்துவிட்டதை வெளியுலகிற்கு எடுத்துச் சொல்லியிருக்கிறது.

பக்தாத்தைக் கைப்பற்றுவதே தமது இலக்கு என வரிந்து கட்டிக்கொண்டு போரிடும் அமெரிக்க- பிரிட்டிஷ் படைகள் - இனிவரும் நாட்களில் தமது நோக்கத்திற்காகத் தாக்குதலை தீவிரப்படுத்தும் வாய்ப்பே அதிகமாக இருப்பதால் - சாதாரண பொது மக்களின் உயிரிழப்பும் உயர்வடையும் ஆபத்தே எதிர் நோக்கப்படுகின்றது.

அதிலும் - நகரங்களுக்குள்ளாக தரைவழித் தாக்குதல் நெருங்கும்போது இந்த அச்சுறுத்தல் இன்னமும் அதிகமாகும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

ஈராக்கிய மக்களைச் சர்வாதிகாரச் சதாம் ஹுசைனின் பிடியிலிருந்து விடுவிப்பதற்காகவேதான் இந்தப் போரை நடாத்துவதாக உலகிற்கு 'மனிதாபிமான முகம்' காட்ட முனையும் அமெரிக்கா -

தன்து தாக்குதல்கள் பொதுமக்களையும் குறிவைத்து நடாத்துவதை அறியாதிருக்கிறது என்று கூறுவதற்கில்லை.

ஈராக்கிய மக்களுக்கு அழிவை ஏற்படுத்தி, அதன் மூலமாக ஈராக்கியப் படைகளின் போரிடும் வலுவைத் தளர்ச்சியுறச் செய்வதற்கே அமெரிக்கா முயல்வதாக- ஈராக்கியத் தரப்பிலிருந்து குற்றஞ்சாட்டப்படுவதையும் இங்கு கவனத்திற்கொள்ள வேண்டும்.

உலகநாடுகளுக்கு - பயங்கரவாதம், வன்முறை என்பவற்றை எதிர்க்கும் நியாயவானாகக் காட்டிக்கொண்டு - மனிதாபிமானம், ஜனநாயகம், மனித உரிமைகள் பற்றியெல்லாம் உபதேசிக்கப் புறப்படும் அமெரிக்கா - மனித அழிவொன்றை ஈராக்கில் அப்பட்டமாகவே மேற்கொள்வது அதன் இரட்டை வேடத்தையே தோலுரித்துக்காட்டுகின்றது.

# மிகக்கடினமான யுத்தத்தை வெற்றிகொண்டு மிகக்கடினமான சமாதானத்தை எதிர்கொள்கிறோம்

## பதினொரு வேங்கைகள் அஞ்சலி நிகழ்வில் தமிழ்மாறன்

(யாழ்ப்பாணம்)

கடலில் கடற்புலிகளின் விசைப்படகுகளைக் கண்டால் ஓடி ஒளிந்து கொள்ளும் கடற்படையினர்- இன்று யுத்த நிறுத்த ஒப்பந்த காலத்தில் எமது படகுகளை தேடித் தாக்குகின்றனர் என்று கொடிகாமத்தில் நடந்த சர்வதேசக் கடற்பரப்பில் கப்பல் மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்த 11 போராளிகளின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தென்மராட்சிப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ் மாறன் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்-

ஆரம்ப காலங்களில் விநியோகப் பணிகளை கடற்படையினர் மேற்கொள்வதாக இருந்தால் ஆழ்கடற்பரப்பிற்தான் - அதுவும் பல விசைப்படகுகள் பாதுகாப்பளிக்க - உலங்கு வானூர்தி விமானங்களின் உதவியுடனும்தான் மேற்கொண்டனர். ஆனால், இன்று கடற்படையினர்- யுத்தநிறுத்த காலத்தில் போரிற்கு எம்மை வலிந்து இழுக்கின்றனர்.

எமது கடற்பயணத்தில், புலிகளின் வளர்ச்சியும், தோற்றமும் எமது போராட்டத்தை வலுப்படுத்தி நிற்கின்றது. இந்தப் போராட்டத்தில் கடலில் விடுத்லைப் புலிகளின் பலத்தை பலவீனப்படுத்துவதற்காக யுத்தநிறுத்த காலங்களில் கடலிலே தாக்குகின்றனர். மிகக்கடினமான சமர் நாட்களை வெற்றி கொண்டு, நாங்கள் சமாதானத்தை எதிர்கொண்டவேளை, யுத்தநிறுத்த விதிமுறைகளை மீறிவருவதன் காரணமாக மிகக் கடினமான சமாதான நாட்களை எதிர்கொள்கின்றோம்.

நாம் எவ்வளவிற்கெவ்வளவு பொறுமையாக இருக்கின்றோமோ, அவ்வளவிற்கவ்வளவு பொறுமையாக இந்தச் சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்வோம். சமாதான காலங்களில் எமது ம்யற்சியில் யுத்தநிறுத்தத்தை மீறி, கடற்படைக்கு எதிராக எந்தவொரு தாக்குதலையும் நாம் மேற்கொள்ளவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

திருமலை - திரியாயில்

## மீள்குடியமர்வைக் கவனிப்பதற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலகம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள திரியாயில் - தமிழர் புனர்வாழ்வுக்கழகம்- அலுவலகம் ஒன்றைத் திறக்கவுள்ளது. இந்த அலுவலகம் இன்று காலை திறந்து வைக்கப்படும்.

திரியாய் மற்றும் அதனை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் கடந்த பல வருடங்களாக இடம்பெயர்ந்திருந்தனர். புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தபின்னர், இப்பகுதியில் மீளக்குடியமரும் மக்களின் நன்மை கருதியே தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அலுவல்கத்தைத் திறக்கவுள்ளது.

மீள்குடியமர்வுப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு, அதற்கான உதவிகளைச் செய்யவே இந்த அலுவலகத்தைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் திறக்கவுள்ளது.

# அழிவிலிருந்து நாட்டை மீட்கும் பொறுப்பு எங்களுக்கே உள்ளது!

## இப்படிக் கூறுகிறார் அநுரா பண்டாரநாயக்க

(கொழும்பு)

இந்த நாட்டை அழிவுப்பாதையிலிருந்து மீட்கவேண்டிய பொறுப்பும் அக்கறையும் தமக்கே அதிகமாக இருப்பதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான அநுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.



தியத்தலாவவில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு உரையாற்றிய அவர் -

எவ்வளவுதான் மூடிமறைத்துப் பேசினாலும், தனித் தமிழீழத்தைப் பெறுவதற்குப் புலிகளுக்கு இந்த அரசாங்கம் உதவிக்கொண்டிருப்பது என்பதே உண்மை.

ஒரு தனி அரசை நிறுவுவதற்கான முயற்சிகளில் புலிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். அண்மையில் திறக்கப்பட்ட நீதிமன்றம் இதற்கு நல்ல உதாரணம். இதையெல்லாம் மறைத்துக் கொண்டு அரசாங்கம் சமாதானம் என்றும் - பேச்சு என்றும் மக்களை ஏமாற்ற நினைக்கிறது.

அரசின் ஒவ்வொரு செயற்பாடுகளுமே புலிகளுக்கு உதவியாக இருக்கிறது. யுத்தம் செய்வதற்கான திட்டத்துடனேயே புலிகள் இருந்துகொண்டிருக்கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில், இவருக்கு இதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால், எமக்கு இதில் கவலையிருக்கிறது, அக்கறை இருக்கிறது, நாட்டை அழிவுப் பாதையிலிருந்து மீட்கும் பொறுப்பும் இருக்கிறது.

தாயும் தந்தையும் இந்த நாட்டின் உயர்வுக்கும், மீட்சிக்கும் பல தியாகங்களைச் செய்துள்ளனர். சகோதரியும் அவ்வாறே என்று அநுரா பண்டாரநாயக்க மேலும் தெரிவித்தார்.

## கொழும்பு - தூத்துக்குடி கப்பல்சேவை ஒப்பந்தம் அடுத்த மாதம் கைச்சாத்து!

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான கப்பல் சேவைகள் தொடர்பான ஒப்பந்தம், அடுத்த மாதம் இந்திய - இலங்கை அரசாங்கங்களுக்கு இடையில் செய்துகொள்ளப் படவுள்ளது.

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை நடத்துவது தொடர்பான யோசனைகள் அடங்கிய திட்டங்களை இலங்கை அரசாங்கம் தயாரித்திருந்தது.

இந்தத் திட்டயோசனைகள் இந்தியாவிடம் சமர்ப்பிக் கப்பட்டு, இப்போது அந்நாட்டு அரசாங்கத்தின் பரிசீலனையிலிருந்து வருகின்றது.

அடுத்த மாதமளவில் இதுதொடர்பான இணக்கப்பாடு எட்டப்பட்டு, இருதரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என அரசதரப்புத் தெரிவித்துள்ளது. இருநாட்டுக் கப்பற்துறை அமைச்சர்களும் - புதுடெல்கியில் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவர் எனவும் தெரியவருகிறது.

ஈராக் மீதான போரால்

## தேயிலை ஏற்றுமதி பெரிதும் பாதிப்பு; ஏற்றுமதியாளருக்கு களஞ்சிய வசதி

வளைகுடாவில் ஏற்பட்டுள்ள போர் நெருக்கடிகளால் இலங்கையின் பிரதான ஏற்றுமதித் தொழிலான தேயிலை உற்பத்தி பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது.

தேயிலை ஏற்றுமதியாளர்கள் இதனால் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். இவர்களுக்கு மாற்றுவசதிகளைச் செய்துகொடுக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

தேயிலை ஏற்றுமதியாள்கள்- தமது பொருட்களைக் கொழும்பில் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான வசதிகளைச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இலங்கையின் பிரதான தேயிலை ஏற்றுமதி நாடுகளில் ஈராக் முக்கியமானதாகும். ஈராக்கில் போர் ஏற்பட்டுள்ளதால், உடனடியாக அந்நாட்டுக்குத் தேயிலையை ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்புக்கள் இல்லாததாலேயே அரசாங்கம் களஞ்சியவசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கத் தீர்மானித்துள்ளது.

# அடிப்படை வசதிகளை ஏற்படுத்த கோரி வவுனியா வளாக ஊழியர்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகக் கல்விசாரா உத்தியோகத்தர்கள் தமக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி நேற்றுக காலை 10.30 மணிவரை அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நிர்வாகம் இயங்குவதற்கான நிரந்தரக் கட்டடவசதிகள் இல்லை, மலசலகூட வசதியில்லை, இளைப்பாற இடமில்லை, உணவு உண்பதற்கான கூடம் இல்லை, ஊழியர்களுக்கு கடன்வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை போன்ற பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்றும்,

வவுனியா வளாகத்துக்கு- யாழ். பல்கலைக்கழகத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி அதிகரிக்கப்படவேண்டும் என்றும், வளாகத்துக்கான நிதி மாதத்தின் நடுப்பகுதிக்குள் அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும், நிர்வாகச் சீர்கேடுகள் நீக்கப்பட வேண்டும் என்றும் ஊழியர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

வவுனியா வளாகம் ஆரம்பிக்கப்பட்டு 12 வருடங்களாகியும் தமக்கு விடுதிவசதிகள் செய்து கொடுக்கப்படாதுள்ளமைக்கும் ஊழியர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

நேற்றைய போராட்டத்தைக் கவனத்தில் எடுத்து, யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வராவிட்டால், கல்விசாரா ஊழியர்களின் கூட்டத்தைக் காட்டித் தொடர்ச்சியான தொழிற்சங்கப் போராட்டத்தை நடத்தப் போவதாகவும் ஊழியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# ஈராக்கின் வரலாற்றுப் பாரம்பரியமும் அமெரிக்கா தொடுத்துள்ள போரும்!

(நேற்றைய தொடர்ச்சி)

இது ஒரு தனியான அதிகார மேம்போக்கு நிலையாகும். (sole super power). இவ்வாறான ஒரு கட்டமைப்பில் 1991 இல் ஈராக் மீதான முதலாவது பாலைவன யுத்தத்தினை ஜோர்ஜ் புஷ் நடத்திக் காட்டி- அமெரிக்காவின் முதன்மையையும், வீரியத்தையும் உலகிற்குக் காட்டினார்.

1945 இன் பின்பான காலப் பகுதியில் அமெரிக்காவின் கொள்கை, அதன் கம்பீரம், முதல்தர நடவடிக்கை, அமெரிக்காவின் தலைவரே உலகின் முதல் மனிதன் என்ற தோறறப்பாடு, யுத்த ஓர்மம் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு கெட்டிக்கார மனிதனாக - அமெரிக்காவின் உளவு ஸ்தாபனமான சீ.ஐ.ஏயின் தலைவராயிருந்த ஜோர்ஜ் புஷ் தலைமை தாங்கியதும், அமெரிக்க மேலாதிக்கம் உலகெங்கணும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றதொரு தோற்றப்பாடு ஏற்பட்டது. அந்தவகையில், இனிமேலும் அமெரிக்காவின் முதற்தரத் தலைவராக என்றும் இருக்கப்போகின்ற மனிதரும் ஜோர்ஜ் புஷ்தான்.




1991 ஆம் ஆண்டு பாலைவன யுத்தமானது- அமெரிக்கா ஒரு பாலைவன யுத்தத்திற்கான தளபாடங்களையும், பயிற்சியையும், ஏனைய தயார்படுத்தலையும் செய்து பரீட்சித்துப் பார்த்த சம்பவமாகும். பாலைவனத்து மண்ணின் வர்ணத்தில் யுத்த தாங்கிகள், உடைகள், ஏனைய ஆயுதங்கள் என்பனவற்றைத் தயார் செய்து எதிரியின் கண்ணிற்படாமல், மணலோடு மணலாகப் பதுக்கிக் கொள்ளும் வரத்தினை இராணுவத் தொழில் நுட்பத்தினூடாகப் பெற்றுக்கொண்டது அமெரிக்க இராணுவம். அந்த யுத்தத்திற்காகத் தயாரித்த பல சுடுகருவிகள் வாகனங்களிலிருந்து தூசுகள்பட்டு இறுகிப்போயின. அவற்றை எவ்வாறு மேலும் கச்சிதமாக வடிவமைப்பது என்ற ஆய்வுகளும்- அந்த யுத்தகளத்தில் வைத்தே செய்யப்பட்டது. மொத்தமாகச் சொல்வதானால் -உயர்திணை மனிதரால்- அ.்.றிணை இராணுவத் தளபாடங்கள் பற்றிப் பயிலப்பட்ட கட்டமே அது.

12 ஆண்டுகளின் பின், ஜோர்ஜ் புஷ்ஷின் மகன் தலைமையில், புதிதாக வடிவமைக்கப்பட்ட இராணுவத் தளபாடங்களுடன், தற்போதைய ஈராக் யுத்தம் நடத்தப்பட்டு வருகிறது. இது வெறும் பாலைவனப் போர் - II அல்ல. 21 ஆம் நூற்றாண்டின் உலக ஒழுங்கின் ஆரம்பமுமாகும். உலகின் தனியுரிமை வல்லாதிக்க வியாபகம் கொண்ட அமெரிக்காவும், 1945 இன் முன்பான காலப்பகுதியில் "சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யமாக" இருந்த பிரித்தானியாவும் தனித்து நின்று போராடத் துணிந்து விட்டன.

1945 இன் பின் அமெரிக்க, ரஷ்ய அரசுகள் செயற்பட்டது போல, ஆனால் அதற்கு முற்றிலும் வேறுபட்டதாக இன்றைய அமெரிக்க, பிரித்தானியக் கூட்டு அமைந்துள்ளது. இவ்விரு நாடுகளும் முதலாளித்துவ நாடுகளாக இருப்பதால், அதிகாரச் சமநிலை என்ற பேச்சிற்கே இடமில்லாது போய் விட்டது. முதலாளித்துவ சிந்தனையும், அதிநவீன இராணுவப் பலமும், தகவற்தொழில்நுட்ப வளர்ச்சியும்- பொருளாதாரத்திலும் அரசியலிலும் முழு உலகையும் ஆக்கிரமிக்கும் நிலைக்கு வித்திட்டு விட்டது. இதில் இன்னோர் சிறப்பு என்னவெனில், அமெரிக்கா ஒரு தனிக்கண்டத்தில் இருக்க, ஐரோப்பாவிலிருந்து பிரித்தானியா எழுச்சி கண்டு கைகுலுக்கி நிற்பதுதான். 1990 களின் பின் அமெரிக்கா உலகின் பல பாகங்களில் தனது இராணுவக் கிராமங்களை உருவாக்கி வருகிறது. அவ்வாறான ஓர் ஆரம்ப ஏற்பாட்டினை மத்திய கிழக்கில் ஈராக்கும், குவைத்தும் செய்திருந்தன.

சதாம் ஹுசைன்- குவைத்தை ஆக்கிரமிக்கப் போகிறார் என்ற உடனடிக் காரணமே அமெரிக்க வியாபகத்திற்கான முதற் கதவினைப் பாலைவன வெளிக்குள் திறந்துவிட்டது.

ஈராக் தரை எல்லைகளை மட்டும்கொண்ட ஒரு நாடாகும். வடக்கே துருக்கி, கிழக்கே ஈரான், தென்கிழக்கில் குவைத், தென்மேற்கில் சவுதி அரேபியா, மேற்கில் ஜோர்டான், வடமேற்கே சிரியா என ஆறு நாடுகளைத் தரை எல்லைகளாகக் கொண்டதே ஈராக். இத்தரை எல்லைப் புவியியல் அமைப்பு ஈராக்கிற்கு எந்த வகையிலும் உகந்ததல்ல.

ஈரான் 1980-88 வரையான காலப் பகுதியில் ஈராக்குடன் தொடர் யுத்தம் செய்த நாடு. குவைத்திற்குள் 1991 இல் அத்துமீறிப் புகுந்து எண்ணெய் திருடியதாகக் குவைத் - ஈராக் மீது குற்றம் சாட்டியது. அதுவே பின்னர் பாலைவனப்புயல் (Desert storm) எனும் போராக வெடித்தது. சவூதி அரேபியா- ஈராக்குடன் ஒத்திசைவாக இல்லை. ஜோர்டான், சிரியாவும்- ஈராக்கிற்கு உதவுவதாக இல்லை. இவற்றைவிட ஈராக் நிலத்திலேயே வடக்கே குர்திஷ் இனத்தவர் தம்மை ஈராக் நிர்வாகத்திலிருந்து பிரித்து, தனியான சுயாட்சி அமைப்பொன்றை உருவாக்கிவிட்டனர். இவ்வதிகாரத்தைப் பெறுவதற்காக 1991 இற்குப்பின்பான காலப்பகுதியில் துருக்கியின் பின்னணியுடன் சதாமின் அரசுக்கெதிரான போராட்டத்தை நடத்தவேண்டியிருந்தது. குர்திஷ் மக்களின் ஆயுதப் போராட்டத்தைக் கட்டுப்படுத்த உலங்குவானூர்திகளைப் பாவிக்கலாம் என ஜோர்ஜ் புஷ் - சதாமிற்குப் பகிரங்கமாக அறிவித்தது பலருக்கு ஞாபகத்தில் இல்லாமற் போயிருக்கும்.

இன்றைய சூழலில் துருக்கி அமெரிக்கப் படைகளுக்கு விமானத் தளங்களை வழங்கியுள்ளது. அதேவேளை, துருக்கி ஆயிரம் கொமாண்டோக்களை- வட ஈராக்கியப் பகுதிக்குள் இறக்கியுள்ளது. இந்த எதிர்பாராத உள்நுழைவு குர்திஷ் இராணுவத்திற்கும்- துருக்கிய இராணுவத்திற்கும் மோதலை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களே அதிகமாக உள்ளது. இதை அமெரிக்கா விரும்பப் போவதில்லை. ஈராக்கியப் படைகள் குர்திஷ் பகுதிக்குள் நுழைந்தால், குர்திஷ் மக்கள் இருபக்க நெருக்கடி (ஈராக் - துருக்கி) ஒன்றை எதிர்கொள்ள வேண்டியநிலை ஏற்படும்.

தற்போது ஈராக்கின் வடமுனையும், தென்முனையும் - விமான, ஏவுகணைத் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது. தென்பகுதியில் நீண்ட தூரத்தே அமெரிக்க, பிரித்தானியப் படைகள் தரை வழியாகத் தாண்டிவிட்டன. இதன்போது ஈராக்கின் தென்பகுதி நகரான பஸ்ரா சுற்றிவளைக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் அடிபடுகின்றன. ஈராக்கின் தலைநகரான பக்தாத்தை நோக்கி விமானத் தாக்குதலும், ஏவுகணைத் தாக்குதலும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. ஈராக் நீண்டகால யுத்த


சதாம் ஹுசைன்

அனுபவமுள்ள நாடாக இருப்பதால்- பதுங்கு குழிகளும், ஏனைய அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் தமது கட்டடங்களை நிர்மாணித்திருப்பதால் சேதங்கள் குறைவாகவே உள்ளன.

கட்டடங்களும், எண்ணெய்க் கிணறுகளும் பெருமளவில் சிதைந்து வருகிறது. ஈராக்கிற்கு வெளியில் இருப்பவர்கள் செய்தி ஊடகங்களினூடாக ஈராக் யுத்தம் பற்றிப் பிரமிப்பாக அறிந்து கொண்டிருக்கும் விடயங்கள் பல. ஈராக்கிய மக்களைப் பொறுத்தவரை மிகச் சாதாரண விடயமாக அல்லது நடைமுறையில் எதிர்பார்த்த ஒன்று எனச் சாதாரணமாகக் கடந்து செல்லக்கூடியதாகக்கூட இருக்கலாம்.

அமெரிக்கா - ஒசாமா பின் லேடன் வேட்டையில் இறங்கிய போது, ஆப்கானிஸ்தான் மலைப் பாகங்களில் குண்டுகளை வீசிய போது, ஆப்கானிய மக்கள் அகதிகளாக, சாப்பாட்டிற்குக்கூட வழியின்றித் தெருவில் இறங்கியநிலை ஈராக்கிய மக்களுக்கு இல்லை. ஈராக்கிய மக்கள் வளம்மிக்கவர்கள். சதாமின் எதிர்ப்பிலக்குக்கு ஆதரவாக இருப்பவர்கள். இந்நிலை அமெரிக்க, பிரித்தானியப் படையெடுப்பாளர்களுக்குப் பிரச்சினையான ஒரு விடயமாகும். போர் மிரட்டலோ, அனுதாபத்திற்குச் சாப்பாடு பேழடும் நிலையோ- ஈராக்கிய மக்களைப் பயப் பீதிக்குள்ளாக்கவோ, அணைத்தெடுக்கவோ உதவப் போவதில்லை.

1991 இல் தந்தை புஷ்ஷின் அணுகுமுறையும், 2003 இல் மகன் புஷ்ஷின் அணுகுமுறையும் ஈராக்கில் புதிதாக எதையும் ஏற்படுத்திவிடவில்லை. அமெரிக்கா என்பது ஈராக்கிய மக்களின் மனதில் சைத்தான் நிலையில்தான் உண்டு. அதனால், அமெரிக்கர்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள். அதற்கான புனிதப்போர் ஒன்றையே சதாம் முன்னெடுக்கிறார் என்ற இஸ்லாமிய அடிப்படைவாதப் போக்கு (Islamic Fundamentalism) அரசியல் தேவைகளைவிட பலமான பற்றினை ஏற்படுத்தவல்லது. மதத்தின் பேரால் என்ற கருத்து முன்வைக்கப்பட்ட பின்னர் கேள்வி கேட்கும்நிலை இல்லாது போய் விடுகிறது. இந்த மதச்சார்புப் போக்கானது சதாமுக்கு ஈராக்கிய மக்கள் மத்தியில் கிடைத்த மிகப் பெரிய ஆத்மீகப் பலமெனலாம்.

1991 இல் இடம்பெற்ற வளைகுடா யுத்தம் - I இற்கும், தற்போது நடைபெறுவதற்கும் முடிவுரையில் பாரிய மாற்றம் இருக்கத்தான் போகிறது. முன்பு சதாமைக் கொல்லாமல், வீரியம் குறைப்பது மட்டும் தான் இலக்காக இருந்தது. ஆனால், அந்த அணுகுமுறை இற்றைவரை அமெரிக்காவிற்கு வெற்றியாக இருக்கவில்லை. இம்முறை யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பே சதாமும், அவரது இரு புதல்வர்களும் ஈராக்கைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என ஜோர்ஜ் டபிள்யு புஷ் நச்சரித்துக் கொண்டிருந்தார். அதற்குச் சதாம் வெளிப்படையாகவே எதிர்ப்புத் தெரிவித்தார். இந்த அறிக்கையின் மூலம் அமெரிக்கா- சதாம் ஈராக்கை விட்டு வெளியேறினாலே காணும் எனக் கருதுவது புரிகிறது. அது இலகுவில் சாத்தியமில்லை என்பதும் அமெரிக்காவிற்குப் புரியாததல்ல.

**விஜயன்**

நேசன்

## எங்கே போகிறோம்...?

# அடுத்தவர் பற்றி.....

இந்த உலகில் எந்தவொரு மனிதனுமே 'இன்னொருவன்' இன்றி வாழ முடியாது. கொஞ்சம் ஆழமாகப் பார்ப்போமானால், அந்த அடுத்தவன் பற்றிய தேவை நேரடியாகவோ, மறைமுகமாகவோ எமது வாழ்வுடன் பிணைக்கப்பட்டிருக்கிறது.

இந்தநிலை ஏறத்தாழ எல்லாக் கிரியைகளோடும் தொடர்புடையது. இவ்வாறு, அடுத்தவன் பற்றிய தேவையே உறவுகளுக்கு, இனசனம், நட்பு, சூழல், சமூகம் என்ற விரிவாக்கத்துக்குக் காரணமாயிற்று.

இதுவொரு இயற்கை விதி- இதனை இயல்பாய் அனுசரித்துப் பேணி வாழ்கிற வாழ்க்கையே அர்த்தமுடைய வாழ்வாகவும் இருக்கிறது.

'No Man is an Island' என்று அதனாற்தான் சொன்னார்கள்.

இந்த இயல்பினை உணர்ந்துகொண்டு ஒருவரை ஒருவர் பரஸ்பரத் தேவையுணர்ந்து, அனுசரணையாக வாழ்கிற விதத்தில்தான் வாழ்வில் செழிப்பு - ஒரு தளைத்தல் - ஒரு பிடிப்பு - ஒரு அர்த்தம் தோன்ற முடியும்.

சிலசமயங்களில் நாம், இந்த 'அடுத்தவர்' மீதான அக்கறையை, கவனிப்பை, உணர்வை மறந்து போகிறோம்- அந்த அடுத்தவர் எமது அன்னையாக- தந்தையாக- கணவனாக - மனைவியாக- நண்பராக - அயலவராகக்கூட- அமர்ந்து பயணம் செய்கிற யாரோ ஒருவராகக்கூட இருக்கலாம் - உறவின் நெருக்கத்தைப் பொறுத்துப் பொறுப்புக்கள் சிலசமயம் வேறுபடலாம். ஆனால், எமது வாழ்வு நெடுகிலும் இந்த அடுத்தவரின் உடனிருப்பு இல்லாமல் போகாது. உறவு என ஏற்படுத்திக்கொண்டால் மட்டுமே இத்தகையநிலை என்பதில்லை.

நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் - புறம் சார்ந்தும், அகம் சார்ந்தும் எமக்குத் தேவைகள் இருக்கின்றன. எனவே, இத்தகைய தேவைகளை நிறைவு செய்துகொள்ள இன்னொருவரின் உதவி - பங்களிப்பு வேண்டப்படுகிறது.

பசிக்கிறபோது உணவுதர - அல்லது அந்த உணவைத் தேடிக்கொள்ள எமக்குத் தேவையான உதவிபுரிய இன்னொருவர் தேவைப்படுகிறார். அந்த இன்னொருவர் - அடுத்தவர் எமது அம்மாவாக, மனைவியாக சாப்பாட்டுக் கடைக்காரராக, பலசரக்கு வியாபாரியாக எவராகவேனும் இருக்கலாம் . அதுபோலவே எமக்குத் தலை வலிக்கிறபோது - எமக்கு ஒரு பொருள் தேவைப்படுகிறபோது இந்த அடுத்தவரின் உதவி ஒத்தாசை வேண்டப்படுகிறது. நல்ல காலமாக இந்த விதமான இயல்பு நிலைக்கு எந்தவிதமான பாதிப்பும் இதுவரை வந்துவிடவில்லை.

எமது அகம் சார்ந்த தேவைகள்- மனம் தொடர்பான - உள்ளுணர்வுகள் சம்பந்தமான தேவைகளும், எம்மை அடுத்தவர் நாடும்படி தூண்டுகின்றன. இந்த இடத்திற்தான் பிரச்சினையே வருகிறது- ஏனைய தேவைகள்போல் இந்த வகையான தேவைகள் நாம் கேட்டுப் பெற்றுக் கொள்கிற விடயங்களல்ல.

இவை உணர்ந்து செய்கிற உதவிகள்- புரிதல் தொடர்பான காரியங்கள்- அப்பாவுக்கு இன்று மனநிலை சரியில்லைப்போலத் தெரிகிறது. அவரது mood நன்றாக இல்லை. இப்போது போய் எனது மிக அற்பமான தேவைக்கு அவரை நச்சரிப்பது சரியில்லை என்று புரிந்துகொண்டு செயற்படுகிற பிள்ளை- எனது, 'அவருக்கு இந்த விதமான நடவடிக்கைகள் பிடிக்காது. அவரது மனநிலையை அது பாதிக்கும். இந்தக் காரியம், இந்தச் சொல் அல்லது இந்தவிதமான அணுகுமுறை அவரை மிகவும் பாதிக்கும். எனவே நான் இதனைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என உணர்ந்து கொள்கிற மனைவி- வெறும் Joke தான், ஆனாலும் எனது நண்பருக்கு இது மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்தநிலையில் அவரிடம் இதைச் சொல்வது சரியில்லை எனப் புரிந்து கொள்கிற நண்பன் - அயலவன் - அடுத்தவன் எத்தனை பேர்?

சிந்திக்கும் - அறிவுபடைத்த உயர்ந்த உயிரினமாகிய மனிதனிடத்தில் இந்தப் பண்பு விருத்தி பெறவேண்டாமா?

இப்படியான விடயங்களில் நாம் எவ்வளவு தூரம் அடுத்தவர் பற்றி அக்கறை எடுக்கிறோம்? இந்த மாதிரியான விடயங்களில் நிகழும் அலட்சியம் - எண்ணிப்பாராமை - எவ்வளவு அகநிலைச் சேதங்களை விளைவிக்கும் என நாம் எண்ணிப் பார்க்கிறோமா?

இருபத்து நான்கு மணிநேரமும் நம்மைப் பற்றியே அக்கறை எடுத்துத் தொழிற்படுகிற நாம் - எமக்கு நேரம் ஒரு சிறுசேதம் - பாதிப்புக் குறித்து மிகவும் பொறுப்பீனமாய் எதிர் விளைவு காட்டுகிற நாம் - எம்மோடிருக்கிற அடுத்தவர் குறித்து எவ்வளவு தூரம் பிரக்ஞை உடையவராய் நடந்து கொள்கிறோம்.

இவருக்கு இந்த விடயம் மிகவும் சின்ன விடயமாகப்படலாம், இதுக்கெல்லாம்போய் அலட்டிக்கொள்வதா என்று கேட்டும் விடுவார்கள். இப்படியே ஒவ்வொருவரும் அடுத்தவர் பற்றிய அக்கறையை- அடுத்தவர் மனசு பற்றிய உணர்வை அக்கறைப்படுத்தத் தவறுவதால்தான் - சிறிய வெடிப்புகளாக உருவாகும் பிரிவுகள், விலகல்கள் - பெரிய பிளவுகளாக ஆகிப்போகின்றன.

உறவுகளின் ஒட்டுதல் குறைந்து போகிறது, பரஸ்பரம் செலுத்தும் அன்பு அற்றுப்போகிறது, சுயநலத்தன்மை மேலோங்கி மனுஷத்தன்மை குறைந்து போகிறது.

வியாபாரத்தன்மையிலான உறவுகள் ஏற்பட்டுப் போகின்றன.

இலாப நட்டக்கணக்குப் பார்த்து உதவிகளை ஏற்படுத்திக்கொள்வதும் - உறவை முறித்துக்கொள்வதும் சர்வசாதாரணமான காரியங்களாகிப் போகின்றன.

நமது வாழ்வின் இயல்பான அழகு அற்றுப்போகிறது.

நிஜமான பு,க்களுக்குப் பதிலாகத் துணியிலும், பிளாஸ்ரிக்கிலும் பு,க்களைச் செய்து கொள்வதுபோல பொய்மையான பிரதியீடுகள் எல்லாத் துறைகளிலும், குடும்பம் சார்ந்த உறவுகளிலும் சாத்தியமாகி - மிகவும் சரியென்றும் ஆகிப்போகும்.

Ready made புன்னகையும், போலியான அன்பு வார்த்தையும் மிகவும் சாதாரணமான கிரியைகள் - அதற்கென்ன, தேவையைப் பொறுத்து adjust பண்ணிக் கொண்டால் என்ன தப்பு என்றெல்லாம் கேட்கத் தொடங்கி விடுவோம் - எங்கேயோ பிழையிருக்கிறது... அல்லவா... புரிந்துகொள்வோமா?


மீண்டும் சந்திப்போம்.......

# ஈராக் போர்க்களம்

## பக்தாத்தில் மக்கள் கூடும் சந்தைப் பகுதி மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலின் கோரக்காட்சிகள்









# பக்தாத் மீது மீண்டும் தாக்குதல்; ஈராக்கிய பொதுமக்கள் பலர் பலி!

(பக்தாத்)


பக்தாத் மீது நேற்றுக்காலை அமெரிக்கப் படைகள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 14 பொதுமக்கள் பலியானதாகவும், 30 பேர் காயமுற்றதாகவும் ஈராக் அறிவித்துள்ளது. தாக்குதலைத் தொடர்ந்து கோபமுற்ற ஈராக்கியர் அமெரிக்க எதிர்ப்பு சுலோகங்களைக் கூறியவாறு வீதிகளில் திரண்டனர்.

பொதுமக்கள் குடியிருப்புக்களில் 15 எரிந்த சடலங்கள் காணப்பட்டதாகவும், இறந்த பொதுமக்களின் தொகை 45 என்றும் அங்குள்ள வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

சதாமுக்கு எதிரான போரின் போது, ஈராக்கியப் பொதுமக்களின் இறப்புக்களை இயன்றளவு குறைப்பது என்ற அமெரிக்காவின் திட்டத்துக்கு வீழ்ந்த மாபெரும் அடியாக இத்தாக்குதல் விளங்குகின்றது. இது ஏற்கனவே கொந்தளிப்பு நிலையில் இருக்கும் ஏனைய அரபு நாடுகளை அமெரிக்காவுக்கு எதிராகச் சீண்டிவிடும் நடவடிக்கையாக மாறிவிட்டது என, செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பக்தாத் சந்தைத் தொகுதி ஒன்றின் மீது ஏவுகணைகள் வீழ்ந்த சம்பவம் குறித்து பிரிட்டிஷ் விமானப் படையதிகாரி ஒருவர் மன்னிப்புக் கேட்டுள்ளார். பொதுமக்கள் இழப்பு எம்மைக் கவலைக்குள்ளாக்குகின்றது என அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக, இத்தாக்குதலினால்



தாக்குதலில் கருகிக் கிடக்கும் சடலங்கள்

நின்றுபோய்விட்டிருந்த ஈராக்கிய தொலைக்காட்சி ஒளிபரப்பு, சில மணிநேரங்களின் பின்னர், மீண்டும் காலையில் செயற்பட ஆரம்பித்தது. இத்தகைய சிவிலியன் இலக்குகள் மீதான தாக்குதல் ஜெனீவா உடன்படிக்கையை மீறும் செயல் என

## உலகவலம்

சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

ஈராக், தான் கைப்பற்றிய அமெரிக்கப் போர்க்கைதிகளை தொலைக்காட்சியில் மீண்டும் மீண்டும் ஒளிபரப்புவதைத் தடுக்கவே, ஈராக் தொலைக்காட்சி ஒளிபரப்புக் கோபுரங்களை அமெரிக்கா ஏவுகணை மூலம் தகர்த்தது எனினும், மற்றுமொரு ஒளிபரப்புக் கோபுரம் மூலம் ஈராக் தொலைக்காட்சி தன் நிகழ்ச்சிகளை மீண்டும் ஒளிபரப்ப ஆரம்பித்தது.

எனினும், பிரிட்டிஷ் விமானப் படையின் கனரக பி-52 குண்டுவீச்சு விமானங்களின் தாக்குதல், பக்தாத் நகர் மீது மீண்டும் தொடரலாம் என ஊகிக்கப்படுகிறது.

இதேசமயம் - தெற்கின் துறைமுக நகரான உம்-காசிர் பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும், இங்கு இப்போது ஈராக்கியப் படையினர் எவரும் இல்லை எனவும், கூட்டணிப் படைகள் தெரிவித்துள்ளன.

இத்துறைமுகம் ஊடாக விரைவில் ஈராக்கிய மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக கப்பல்கள் வரவுள்ளதாகவும், இதற்காக இத்துறைமுகக் கடற்பகுதியில் ஈராக்கின் கடற்கண்ணிகள் ஏதும் இருக்கின்றதா எனப் பரிசோதிக்கப்படுவதாக்வும் கூட்டணிப் படையதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பிளேயர் வொஷிங்ரன் விரைவு!

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர், அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுடன் பேச்சுக்கள் நடாத்த நேற்று வொஷிங்ரன் புறப்பட்டுச் சென்றார்.



இவர்களின் சந்திப்பின்போது, ஈராக்கில் தற்போது நடைபெறும் போர் பற்றி எதுவும் ஆராயப்படப் போவதில்லை. ஆனால், போரின் பின்னர் ஈராக்கிற்கான உதவிகளை ஐ.நா. மேற்கொள்ள வேண்டும் என இரு நாடுகளும் கோருவது குறித்தே ஆராயவுள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்போரில் தற்போது ஈடுபடாது ஒதுங்கிவிட்ட ஏனைய ஐரோப்பிய நாடுகளிடமும், உதவி நிறுவனங்களிடமும் ஈராக்கிற்கு மனிதாபிமான உதவியை வழங்குமாறு இவர்கள் கோரவுள்ளனர்.

# டாங்கி மீதான தாக்குதலில் 2 பிரிட்டிஷ் படையினர் பலி!

பஸ்ரா நகரில் நடைபெறும் கடும் போரில், பிரிட்டிஷ் படைகள் தவறுதலாக நடத்திய தாக்குதலில் இரண்டு பிரிட்டிஷ் படையினர் பலியாகினர். இவர்கள் பயணித்த சலஞ்சர் -2 என்ற டாங்கி மீது மற்றுமோர் பிரிட்டிஷ் டாங்கி நடத்திய தவறுதலான தாக்குதலிலேயே இரு படையினர் பலியானதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தனர். டாங்கியும் பலத்த சேதமடைந்துள்ளது.

டாங்கிகளில் அடையாளம் காணும் பொறிமுறைகள் இருந்த போதிலும், போரின்போது ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகளே இச் சம்பவத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

இதுவரையில் 20 பிரிட்டிஷ் படையினர் போரில் பலியாகியுள்ளனர். இவர்களில் 18 பேர் விபத்துக்களிலும் தவறுதலான தாக்குதல்களிலும் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஈராக் - பிரிட்டிஷ் துருப்புக்கள் கடும் மோதலில் ஈடுபட்டன!

## பஸ்ரா நகருக்குள் நுழையும் முயற்சி தடுப்பு

பஸ்ரா நகருக்கு வெளியே பிரிட்டிஷ் படைகளுக்கும் ஈராக்கியப் படைகளுக்கும் இடையே கடும் போர் நடைபெற்று வருகிறது. சுமார் ஆயிரம் ஈராக்கியப் படையினர் இத்தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, பஸ்ராவில் உள்ள சதாமுக்கு எதிரான ஷியா இன முஸ்லிம்கள், ஈராக்கியப் படைகளுக்கு எதிராக எந்தநேரமும் கிளர்ச்சி செய்யலாம் என்றும், இதைப்பயன்படுத்தி பஸ்ராவை இலகுவாக கைப்பற்றலாம் என்றும் பிரிட்டிஷ் படையதிகாரிகள் தெரிவித்து வருகின்றனர்.

இதேசமயம், பஸ்ரா நகருக்குள் நுழைய முயலும் பிரிட்டிஷ் படையினரை எதிர்த்து, கடந்த 48 மணி நேரமாக ஈராக்கியப் படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஈராக்கியர்கள் கெரில்லாப் பாணியிலான தாக்குதலை நடாத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது. எலியும் பூனையும் கதைபோல நீண்ட தாக்குதலாக பஸ்ரா தாக்குதல் இருப்பதாக பிரிட்டிஷ் பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார்.

கனரக ஆயுதங்களுடன் கூடிய ஈராக்கிய இராணுவமும், சதாமின் பாத் கட்சி உறுப்பினர்களும் பஸ்ராவில் ஒரு முடிவை கண்டுவிடுவது என்பது போல், பிரிட்டிஷ் படையினர் மேல் தாக்குதலை நடாத்துவதாக இப் பத்திரிகையாளர் கூறுகிறார்.

பஸ்ரா நகர் மீது பிரிட்டிஷ் டாங்கிகளின் குண்டுத் தாக்குதலும் அமெரிக்க எவ்- 18 ஹோர்னட் ரக விமானங்களின் குண்டுவீச்சும் தொடர்கின்றது.

பஸ்ரா நகருக்குள் நுழைய முடியாதபடி பிரிட்டிஷ் படையினரை ஈராக்கிய துருப்புக்கள் தடுத்து நிறுத்தியுள்ளதாக ஈரான் வானொலி தனது செய்தியில் குறிப்பிட்டது.



சிறுகீற்து ஹோவிட்ஸர்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகள் - முஸ்லிம் தரப்பினர் இன்று வவுணதீவில் சந்திப்பு

(மட்டக்களப்பு)

வவுணதீவு பிரதேச செயலகத்தில் இன்று தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகளுக்கும் இடையே சந்திப்பு நடைபெறுகின்றது.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசதரப்பிற்கும் இடையே ஐந்தாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் பேர்ளினில் நடைபெற்றபோது, முஸ்லிம் தரப்பினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த 12 ஆம் திகதி மேற்படி சந்திப்பு நடைபெறுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் சர்வதேசக் கடற்பரப்பில் தாக்கி அழிக்கப்பட்டதனைத் தொடர்ந்து மேற்படி சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (10)

## அமெரிக்கர்களின் சடலங்கள்; அல் ஜெசீரா ஒளிபரப்பியது!



இரண்டு பிரிட்டிஷ் படையினரின் சடலங்களும், இரண்டு பிரிட்டிஷ் போர்க் கைதிகளின் படங்களும் நேற்று கட்டாரிலிருந்து ஒளிபரப்பாகும் அல் - ஜெசீரா தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பப்பட்டது.

பஸ்ரா அருகே அல் சுபையர் நகரில் நடைபெற்ற மோதலில் இப்படையினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரு சடலங்களும் வாகனம் ஒன்றினருகே காணப்படுகின்றன.

## நோர்வேயின் தூதுவரை முஸ்லிம் குழு சந்திக்கும்

(கொழும்பு)

அமைச்சர் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் தூதுக்குழு ஒன்று நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்போர்க்கைச் சந்திக்கவுள்ளது. பேச்சுக்களில் முஸ்லிம் குழுவை மூன்றாவது குழுவாகச் சேர்த்துக் கொள்வது குறித்து இவர்கள் பேச்சு நடாத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது கோரிக்கைகளை நோர்வேத்தரப்பு ஏற்றுக்கொள்ளும் என ஹக்கீம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## சார்ஜா கிரிக்கெட் போட்டி இலங்கையில் நடத்த யோசனை

முக்கோண சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடருக்கான சார்ஜா ஏற்பாட்டுக் குழுவினர், அந்தப் போட்டியை இலங்கையில் நடாத்துவது குறித்து ஆலோசனைகளை மேற்கொண்டு வருகின்றனர். பாதுகாப்புக் காரணங்களை முன்னிறுத்தி சார்ஜா போட்டிகளிலிருந்து தென்னாபிரிக்கா விலகிக் கொண்டதையடுத்து அப்போட்டிகள் யாவும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

ஏப்ரல் 1 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை நடைபெறவிருந்த போட்டிகளில்- இலங்கை, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் பங்குபற்றவிருந்தன. தற்போது, சார்ஜா போட்டியைக் கைவிட நேரிட்டுள்ளதையடுத்து இதனை இலங்கையில் நடத்துவது தொடர்பாக, தென்னாபிரிக்க ஐக்கிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையோடு பேச்சுக்கள் இடம்பெற்று வருவதாகவும், இப்பேச்சுகள் சரியான முடிவினை எட்டும் பட்சத்தில் - குறித்த அதே போட்டிகள் அனைத்தும் கொழும்பில் நடைபெறும் என்றும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

## தமிழ்மொழி...

ஆர்.மயூரதன், ஆர்.செந்தூரன், எஸ்.பரதன், ரி.ஞானாம்பிகை, பி.கெங்காசுந்தரம், ஆர்.சண்முகசுந்தரம், ஆர்.மதியழகன், எஸ்.அருள்நந்தி, எஸ்.சிவகாமி, எஸ்.ரூபகௌரி, ஆர்.தேவகுமாரன், என்.பூபாலசிங்கம், ஜே.நல்லையா, ஏ.நிரஞ்சினி, என்.பரமசிவம், ஆர்.சிவானுஜா, பி.பிரதீபன், கே.செல்வரஞ்சினி, ஏ.பார்த்தீபன், வி.வேல்விழி, கே.செல்வராஜா, கே.மரியஜெனிற்றா, வி.ஜெனிதா, எம்.இராசலிங்கம், எஸ்.கணேசமூர்த்தி, எஸ்.சசீபன், கே.சௌந்தர் ராஜா, எம்.நடராஜா, எஸ்.சுதாகரன், என்.துஷ்யந்தி, எஸ்.சசிதேவி, என்.சிவகௌரி, என்.கமலேஸ்வரன், வி.மஞ்சுளா, எஸ்.சுதாசினி, ரி.கதிர்காமத்தம்பி, வி.கணபதிப்பிள்ளை, வி.சின்னத்தம்பி, எஸ்.குலேந்திரன், எஸ்.லக்ஷ்ணபிரியா, எஸ்.ஆறுமுகம், ஆர்.கௌசல்யா, பி.லதா, பி.அன்னலிங்கம், எஸ்.ஸ்ரீதர், என்.ஆனந்தி, பி.பி.பழனித்துரை, எஸ்.வனஜா, பி.ஷாமினி, எஸ்.சிவரஞ்சினி, கே.உமா, ரி.இராசதுரை, என்.சிவரஞ்சினி, எஸ்.சுபாசினி, கே.நிரஞ்சனா, ஆர்.சிறிதரன், ஜே.வைரமுத்து.

-ஏனையோரின் விபரம் நாளை வெளியிடப்படும்.

கணினி பக்க வடிவமைப்பாளர் தேவை

CORREL DRAW, PAGE MAKER இல்
அனுபவமுள்ள கணினி பக்க வடிவமைப்பாளர்கள்
எதிர்வரும் 30-03-2003 இற்கு முன்னதாக அலுவலக நேரத்தில் பொது முகாமையாளரை நேரில் வந்து சந்திக்கவும்.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

நிர்வாக இயக்குநர்,
நமது ஈழநாடு.

## மீளக்குடியேறுவோருக்கு வீடுகட்ட உதவி

கடந்தகால யுத்தச் சுழலால் இடம்பெயர்ந்து வன்னியில் வசித்து, தற்போது யாழ்ப்பாணம் திரும்பியுள்ள 8 குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் வீடு கட்டுவதற்கான பொருட்களை வழங்கியுள்ளது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் இக்குடும்பங்களுக்கு வீடு கட்டுவதற்குத் தேவையான மரம், ஓலை போன்றவற்றுடன் ஒரு பக்கட் சீமெந்தும் வழங்கப்பட்டுள்ளது. (சு)

## வெளிவாரி வணிகமாணி பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைப் பிரிவினால் நடாத்தப்படும் 2001 ஆம் ஆண்டிற்கான வணிகமாணி பகுதி இரண்டு, வணிகமாணி பகுதி மூன்று ஆகிய பிரிவுகளுக்கான பரீட்சைகள் அடுத்த மாதம் 17 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளன.

வணிகமாணி பகுதி இரண்டிற்கான பரீட்சை ஏப்ரல் மாதம் 17 ஆம திகதி ஆரம்பமாகி 24 ஆம் திகதி வரையும்,

வணிகமாணி பகுதி மூன்றுக்கான பரீட்சை மே மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாகி 22 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளன.

மேற்படி இரு பரீட்சைக்கான பரீட்சை நேர அட்டவணை, அனுமதி அட்டை ஆகியவற்றை எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் வெளிவாரிப் பரீட்சைகள் அலகில் பெற்றுக் கொள்ளலாமென பதிவாளர் அறிவித்துள்ளார். (ச)

## வருடாந்த விருது வழங்கல்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விளையாட்டு அவையினால் நடாத்தப்பட்ட உள்ளக, வெளிக்கள உடலாளர் போட்டிகளில் சிறந்த வெளிப்பாடுகளைக் காண்பித்துத் தெரிவான விளையாட்டு வீரர்களுக்கு விருது வழங்கும் வைபவம் இன்று காலை 9.30 மணிக்கு கலாசாலையில் நடைபெறவுள்ளது.

## பொதுநலவாய குழு திருமலைக்கு விஜயம்

இலங்கையில் சமாதான முயற்சிகள் குறித்து ஆராயும் பொருட்டு பொதுநலவாய செயலகத்தின் நான்குபேர் கொண்ட குழுவொன்று கொழும்பு வந்துள்ளது. இவர்கள் திருகோணமலையிலும், கண்டியிலும் சமாதானத்தில் இளைஞர்களின் பங்கு குறித்துக் கருத்தரங்கு ஒன்றினை நடத்தவுள்ளனர்.

## ஈராக் தாக்குதலை கண்டித்து அம்பாறையில் ஹர்த்தால்!

(அம்பாறை)

ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலைக் கண்டித்து நேற்று அம்பாறை மாவட்டத்தில் பூரண ஹர்த்தாலும் துக்கதினமும் அனுஷ்டிக்கப்பட்டது.

அரச நிறுவனங்கள், வங்கிகள், வர்த்தக நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. கல்முனை மாநகரம் ஸ்தம்பிதம் அடைந்து காணப்பட்டது.

இதேவேளை-

ஈராக் மீதான தாக்குதலைக் கண்டித்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை சம்மாந்துறையில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணியினை நடாத்தத் திட்டமிட்டுள்ளனர். ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் கண்டனக் கூட்டமும் நடைபெறவுள்ளது. (8)

## வெற்றிலைக்கேணி போன்றே குடாரப்பு தரையிறக்கமும்!

### கேணல் விதுஷா விபரிப்பு



(வடமராட்சி கிழக்கு)

1991இல் ஆனையிறவு தளத்தை கைப்பற்ற நாம் ஆகாய கடல் வெளிநடவடிக்கையை மேற்கொண்டபோது, இராணுவம் வெற்றிலைக் கேணியில் தரையிறங்கி ஆனையிறவை எப்படிக் காப்பாற்றினார்களோ, அதே போன்று நாம் குடாரப்பில் தரையிறங்கி அத்தளத்தை வெற்றிகொண்டோம் என, மாலதி படையணிப் பொறுப்பாளர் கேணல் விதுஷா தெரிவித்தார்.

குடாரப்பு தரையிறக்க நினைவுக் கல் திறப்பு வைபவத்தில் பேசும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

## தலைவரின்...

கல்லை நேற்றுத் திறந்துவைத்து உரையாற்றிய கேணல் பால்ராஜ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிரி பெரும் படையெடுப்பை நடாத்தி, வன்னியைத் துண்டாட இருந்தவேளை, ஓயாத அலைகள்-3 நடவடிக்கையை ஆரம்பித்து வன்னியில் பெருமளவு பகுதிகளை மீட்டபடி, ஆனையிறவுத் தளத்தை மீட்கும் நோக்கில் குடாரப்பில் ஒரு தரையிறக்கத்தை மேற்கொண்டு 34 நாட்கள் எதிரியுடன் போராடி ஆனையிறவை வீழ்த்தினோம்.

கடல் வழியாகத் தரையிறங்கி இத்தாவிலைத் துண்டாடி, இராணுவத்துக்கான விநியோகத்தைத் தடுத்து நிறுத்திப் போராடி வீரச்சாவடைந்த மாவீரர்களை நாம் என்றும் மறந்துவிட முடியாது. இன்றைய சூழல் நீடித்து, தமிழ் மக்கள் ஏற்கக் கூடிய தீர்வை அரசு முன்வைக்குமானால் அதைப் பரிசீலிக்க நாம் தயார். இது இல்லாது போரை எம் மீது திணிக்க முயன்றால் அதையும் எதிர்கொள்ளத்தயார் என கேணல் பால்ராஜ் மேலும் தெரிவித்தார்.

## மண்ணைக் காத்தது...

களால் எதிரிகளால் எம்மண்ணை அடிமையாக்க முடியவில்லை. இன்றைய சமாதானச் சூழல் மக்களின் வாழ்வில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

மண்ணைப் பாதுகாக்க எப்படி மக்கள் ஒத்துழைத்தனரோ, அதே போன்று இப்பொழுது இந்த மண்ணைக் கட்டியெழுப்பவும் மற்றவர்களின் கைகளை எதிர்பாராது நடவடிக்கைகளைத் தொடர்ந்தால் நல்லது. புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு ஒரு வருடமாகிவிட்டது. ஓரளவு சுதந்திரக்காற்றை மக்கள் சுவாசிக்கின்றனர். எனினும் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை.

எதையும் தரக்கூடிய நிலையில் அரசின் தலைமைத்துவம் இல்லை. தருவதாக இருந்தால் இந்த ஓராண்டுக்குள் தந்திருப்பர். அதைத் தட்டித்தான் பறிக்க வேண்டும். தட்டிப் பறிக்கவும், கேட்டுப் பெறுவதற்குமான காலஅவகாசமாக இன்றைய சூழ்நிலை இருக்கிறது.

குடாரப்பு தரையிறக்கத்தை அரசபடைகளின் தாக்குதலின் மத்தியில் வெற்றிகரமாக நடத்திய எமது தளபதி, இன்று இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் ஏற்பட்ட சமாதானச் சூழ்நிலையில் தந்திரமான முறையில் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து அழிக்கப்பட்டுள்ளார்.

இத்தகைய ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் மத்தியில்- எமது மக்களின் அபிலாஷைகளை எவ்வளவு தூரம் தெளிவாக எடுத்துச்சொல்ல முடியுமோ, அப்படிச்செய்து, அதற்குரிய வழிமுறைகளை எமது தலைவர் தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

இவ்வாறு அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் தலைவர் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறார். சர்வதேச நிலைவரங்களுக்கு ஏற்றவாறு, எமது போராட்டத்தை நடத்தி வருகிறார். ஒரு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் என அவர் நடவடிக்கை எடுக்கிறார். இராணுவ ரீதியான நடவடிக்கைகளுக்கு எப்படி ஆதரவு தந்தீர்களோ இப்போதும் அவ்வாறான ஆதரவைத் தரவேண்டும் என்றார். (லி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

முக்கிய அறிவித்தல்

2003ஆம் ஆண்டு தை மாதம் நடந்த இவ்வருடத்தின் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தின்படி வியாபாரம் நடத்தும் அங்கத்தவர்கள், ஆரம்பிக்கப்போகும் அங்கத்தவர்கள் யாவரும் வருடச்சந்தா 1000/- ரூபாவை 31.03.2003க்குள் செலுத்தி தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முக்கிய குறிப்பு :-

அங்கத்துவம் பெறாத உரிமையாளர் உடனடியாகத் தங்கள் அங்கத்துவத்தை சந்தாப்பணத்தைச் செலுத்தி உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

செயலாளர்,
சாவகச்சேரி கைத்தொழில்
வணிகர்மன்றம்.

(சி/714)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.